## அத்தியாயம் -1

### இலங்கை முஸ்லிம்களும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களும்.

முஸ்லிம்கள் எப்பொழுதும் நாட்டுக்கு விசுவாசமாக இருந்து வந்துள்ளனர். அவர்கள் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கொதிரான போராட்டங்களில் எப்பொழுதும் முன்னணியில் இருந்துள்ளனர். இழந்த சுதந்திரத்தை மீட்டெடுப்பதிலும், வென்றெடுத்த சுதந்திரத்தை வலுப்படுத்துவதிலும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளனர். போர்த்துக்கேயர் இலங்கையை ஆக்கிரமித்தபோது முஸ்லிம்கள் மாயாதுன்னையின் படைகளோடு இணைந்து போரிட்டனர். கோட்டையிலாயினுஞ் சரி, கண்டியிலாயினுஞ் சரி சிங்களவரின் எதிர்ப்பு இயக்கங்கள் அனைத்திலும் முஸ்லிம்களும் இடம்பெற்றிருந்திருந்தனர். இதனால் முஸ்லிம்கள் குடியேற்றவாத ஆட்சியாளரின் தொடர் தொல்லைகளுக்கு ஆளாயினர்.

சுமார் மூன்று நூற்றாண்டு காலமாக 1505 இல் போர்த்துக்கேயரின் வருகை முதல் 1795 இல் ஒல்லாந்தர் நாட்டைவிட்டு நீங்கியது வரையில் கரையோர மாகாண முஸ்லிம்கள் ஆக்கிரமிப்பாளரின் கரங்களில் சொல்லொணாத் துயர்களுக்காளாயினர். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் முஸ்லிம்கள் மீது விதித்திருந்த வேண்டாத குடியியல் மற்றும் பொருளாதார கட்டுப்பாடுகளை பிரித்தானியர் நீக்கினர். ஆயினும் சட்ட மன்றத்தில் முஸ்லிம் மக்கள் அப்பொழுது தமிழ்பேசும் மக்கள் அனைவரினதும் தலைவர் என்று கருதப்பட்ட திரு. பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டனர். தமது நலன்களை ஒரு தமிழர் பிரதிநிதித்துவப்படுத்துவதை விரும்பாத முஸ்லிம்கள் நாட்டின் சட்டமன்றத்தில் தமது சொந்தப் பிரதிநிதித்துவத்திற்காகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். இக்கிளர்ச்சி 1898 இல் பலனளித்ததோடு, திரு. டபிள்யூ. எம். அப்துல் ரகுமான் முஸ்லிம் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்டார்.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் நிலவிய இன அமைதியும் சமாதானமும் 1915 இல் இடம்பெற்ற சிங்கள - முஸ்லிம் கலவரங்களால் சின்னாபின்னமாகியது. 1915 இன் கலவரஙக்ளின் பிரதான விளைவு இலங்கை வாழ் முஸ்லிம்கள் அநாதரவாக விடப்படடுள்ள உணர்வாகும். 1915 கலகத்தின் தாக்கமும் அதனால் ஏற்பட்ட கசப்பான ஞாபகங்களும் முஸ்லிம்களிடையே பெரும் விழிப்புணற்சிகளை ஏற்படுத் தியதோடு, இலங்கை முஸ்லிம்களின் இனத்துவ உரிமைக ளைப்பாதுகாப்பதற்கெனப் பல்வேறு அமைப்புகளை உருவாக்க அவர்களுக்கு ஊக்கமளித்தன. அகில இலங்கை சோனகர் சங்கமும், அகில இலங்கை முஸ்லிம் லீக்கும் முறையே 1922, 1924 ஆம் ஆண்டுகளில் ஸ்தாபிக்கப்பட்டன.

1924 இல் மனிங் சீர்திருத்தங்களின் பிரகாரம் சட்டமன்றத்திலிருந்த உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினரின் தொகை 37 ஆக அதிகரிக்கப்பட்டது. இவர்களில் 6 பேர் இன அடிப்படையில் நியமிக்கப்படவிருந்தனர். தீவின் முழு முஸ்லிம் சமூகத்தினாலும் 3 முஸ்லிம்கள் தெரிவு செய்யப் பட்டனர். 1924க்குப் பின் சட்ட மன்றத்தில் இன அடிப்படையில் நியமனம் பெற்ற அங்கத்தினர்கள் முஸ்லிம்களின் நலன்களைப் பிரநிதித்துவம் செய்யத் தொடங்கிய காலகட்டத்தில்தான் முஸ்லிம் மக்களுக்கான கல்வி குறித்துச் சிறிது சிந்திக்கப் பட்டதோடு, முஸ்லிம் விவசாயிகளுக்குப் பயிர்ச் செய்கைக்கான காணிகளும் வழங்கப்பட்டன. நீதியரசர் எம்.ரீ.அக்பரின் தலைமையில் முஸ்லிம் சட்டக்குழு ஏற்படுத் தப்பட்டு முஸ்லிம் விவாக, விவாகரத்துக் கட்டளைச் சட்டம், முஸ்லிம் மரணசாதனமில்லாப் பின்னுரிமைப்பேறு மற்றும் வக்பு கட்டளைச் சட்டங்கள் நிறைவேறின.

டொனமூர் ஆணைக்குழு இன அடிப்படையிலான பிரநிதித்துவங்களை நீக்கி, 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக் கும் வாக்குரிமை வழங்கி, தேர்தல் மாவட்டங்களை

உருவாக்குவதற்கான விதந்துரைப்பைச் செய்து, சட்டமன்றத் துக்குப் பதிலாக அரச மன்றத்தைப் பதிலீடு செய்தது. 1931 மே-ஜூனில் நடந்த தேர்தலின்போது அரச மன்றத்துக்கு மட்டக்களப்பு தெற்கிலிருந்து ஒரே ஒரு முஸ்லிம் அங்கத்தவர் மாத்திரம் தெரிவாகினார்.

டொனமூர் ஆணைக்குழு முஸ்லிம் மக்களின் நிலையை மோசமாக்கியது குறித்து முஸ்லிம் சமூகம் திருப்தி கொள்ளவில்லை. 1936 இல் அரச மன்றத்துகளுத் தேர்தல் இடம் பெற்றபோது முஸ்லிம் வேட்பாளர் எவருமே வெற்றி பெறவில்லை. ஆயினும், ஏ.ஆர்.ஏ.ராஸிக் அவர்களும், ரீ.பி.ஜாயா அவர்களும் முஸ்லிம் பிரநிதிகளாக நியமனம் பெற்றனர். சிங்கள பௌத்தர்களின் ஆதிக்கத்தின் கீழிருந்த அமைச்சர் சபையின் மதியுரையின்பேரில் தேசாதிபதி இந்த நியமனங்களைச் செய்தார். வேறுவார்த்தைகளில் கூறுவதாயின் முஸ்லிம் பிரதிநிதிகள் சிங்களச் சமூகத்தின் தலைவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதனால் அந்த முஸ்லிம் பிரதிநிதிகளின் கடப்பாட்டு உணர்வு கூடுதலாக அவாகளின் காப்பாளர் மீதான ஒன்றாகவிருந்ததேயொழிய, அவர்கள் பிரதிநித்துவம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்ட சமூகம் மீதான ஒன்றாக விருக்கவில்லை. இந்த முறைமை முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளோடு சிறிதும் பரிச்சயமற்ற முஸ்லிம் பிரதிநிதிகள் தோன்றுவதற்கு வழிசமைத்தது. ஆகவே டொனமூர் ஆணைக் குழு இனரீதியான பிரதிநிதித்துவத்தை நீக்கியவுடன், நேரடிபயாகத் தெரிவுசெய்யப்படும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கான கிளர்ச்சி ஆரம்பித்தது.

முஸ்லிம்கள் மத்தியிலிருந்த சகல அரசியல் பிரிவுகளையும் ஒன்றிணைத்த அகில இலங்கை முஸ்லிம் அரசியல் மாநாடு 1945 பெப்ருவரி 05 ஆந் திகதி சோல்பரி ஆணைக்குழுவைச்

சந்தித்தது. அவர்கள் இலங்கை முஸ்லிம்களின் இனத்துவ உரிமைகளை பாதுகாப்பதற்கு இன ரீதியான பிரநிதித்துவம் மீண்டும் கொண்டுவரப்படல் வேண்டுமமென்று கோரினர்.

சோல்பரி ஆணைக்குழுவினர் புதிய அரசியலமைப்பின் கீழ் சிறுபான்மையினர் நிலைமை குறித்துப் பெருங்கரிசனையை வெளியிட்டதோடு, தேர்தல் தொகுதிகளில் சிறுபான்மையினர் பலம் குறைவாக இருக்குமிடங்களில், பல் அங்கத்தினர் தொகுதிகளை ஏற்படுத்தும் விதத்தில் தேர்தல் தொகுதி எல்லைகளை வரைந்து சிறுபான்மையோருக்குப் போதிய பிரதிநித்துவம் வழங்க முடியுமென்று நம்பிக்கை தெரிவித்தனர். குறிப்பாக முஸ்லிம்கள் நாடு முழுவதும் சிதறிக்கிடந் தமையால் இதைச் செய்ய எண்ணினர். அது, பெரும்பான்மை யோர் சிறுபான்மையினங்களின் நலன்களுக்கு விரோத மாகச் சட்டவாக்க நடவடிக்கைகளில் இறங்கத் தூண்டப் படும்போது அத்தகைய சட்டவாக்கங்களுக்கெதிராகச் சிறுபான்மையி னங்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் வழங்கியது.

1970 மே 27 ஆந் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் சோல்பரி அரசியலமைப்பை நீக்குமாறு பணிப்பாணை பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஒரு புதிய அரசியலமைப்பை வரைந்தது. ஸ்ரீ ல.சு.க. பாராளுமன்றத்தைத் தேசிய அரசுப் பேரவையாகப் பிரகடனஞ் செய்ததோடு, சோல்பரி அரசியல மைப்பு சிறுபான்மையினங்களின் பாதுகாப்புக்கென வழங்கியி ருந்த சில முக்கிய ஏற்பாடுகளையும் நீக்கியது.

சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினங்க ளுக்குச சில பாதுகாப்புகளை வழங்கவென வடிவமைக்கப்பட்டி ருந்த பிரிவு 29(2) மற்றும் (3) இன் ஏற்பாடுகள் ஸ்ரீ ல.சு.க. குடியரசு அரசியலமைப்பில் இடம்பெறவில்லை. பிரதிநிதித்துவம் பெறாத அல்லது போதியளவு பிரதிநிதித்துவம் பெறாத நலன்களைப் பிரதிநித்துவம் செய்வதற்கு அங்கத்தினர்களை நியமனஞ் செய்யும் ஏற்பாடுகளும் குடியரசு அரசியலமைப்பில் மீள இடம்பெறவில்லை. சிறுபான்மையின மக்கள் தமது கருத்துக்களையும் மனக்குறைகளையும் வெளியிடுவதற்கு ஒரு

மேடையாக உபயோகித்துவந்த செனட் சபையும் புதிய அரசியலமைப்பில் இல்லாதொழிக்கப்பட்டது.

1977 ஜூலை 21 ஆந் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற ஜே.ஆர்.ஜயவர்தனவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி 1978 செப்ரெம்பர் 7 ஆந் திகதி ஒரு புதிய அரசியலமைப்பை வரைந்தது. சிறுபான்மையினருக்கான பாதுகாப்புகளை ஒழித்ததைப் பொறுத்தவரையில் ஐ.தே.க. அரசியலமைப்பு 1972 இன் ஸ்ரீ ல.சு.க. அரசியலமைப்பை ஒத்ததாகவே இருந்தது. இரு அரசியலமைப்புகளுமே சோல்பரி அரசியலமைப்பின் 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீளக் கொணர்வதையும் நியமன அங்கத்தவர் கோட்பாட்டை மீளவும் ஏற்படுத்துவதையும், செனட் சபைக்குப் புத்துயிரூட்டுவதையும் தவிர்த்துக்கொண்டன. நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்கான ஏற்பாடுகள், தேர்தல் மாவட்ட எல்லைகள் மீள்வரைவு, விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமை என்பவை ஐ.தே.க. - ஜயவர்தன அரசியலமைப்பினால் அறிமுகஞ் செய்யப்பட்ட கூடுதலான தீங்கு விளைவிக்கும் போக்கிலான ஏற்பாடுகளாகும். இவை முஸ்லிம் சமூகம் ஒன்றரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக இந்த நாட்டில் அனுபவித்துவந்த உரிமைகளைச் சிதைத்துச் சீர்குலைத்து விட்டது.

# அத்தியாயம் 2

## சுதந்திர இலங்கையில் முஸ்லிம்களின் அவல நிலை

**பி**ரித்தானிய அரசு இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குவதற்கு, டொமினியன் அந்தஸ்துச் சட்ட வரைவுக்கு 75% ஆதரவை வலியுறுத்தியது. சிறுபான்மையோர். தமது ஆதரவை வழங்கினாலன்றி இது நடைபெற்றிருக்க முடியாத ஒரு விடயமாகும். வேறு சிறுபான்மையினரைப் போலன்றி, முஸ்லிம்கள் தமக்குப் பாதுபாப்புகள் தேடுவதைவிட இலங் கைக்குச் சுதந்திரம் பெற்றுக்கொள்வது முக்கியமென நினைத்தனர். இதனால் ஒரு தீர்மானகரமான நேரத்தில் துரோகம் செய்யாது சிங்களவர்களோடு சேர்ந்து உறுதியாக நின்றனர்.

அரசியல் அதிகாரம் ஜனத்தொகை யதார்த்தங்களின் பிரகாரம் எப்பொழுதும் பெரும்பான்மை இனத்தவராகிய சிங்களவரின் கைகளிலேயே இருந்து வந்துள்ளது. இது சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் சிறுபான்மையினராகிய தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பாரதூரமான முறையில் பாரபட்சம் விளைவிக்கும் நிலைக்கே இட்டுச் சென்றுள்ளது. சிறுபான்மை யினரின் தேவைகள், அபிலாஷைகளை ஏற்றங்கீகரித்து, அவற்றை உரிய முறையில் வழங்குவதற்குச் சிங்களப் பெரும்பான்மையினம் தவறியமையே இன்று அதிருப்திக்கும் பிரிவினைக் கோரிக்கைக்கும் இட்டுச் சென்றுள்ளது.

### பிரஜாவுரிமைச் சட்டம்

**சு**தந்திரம் கிடைத்த நேரத்தில், சோல்பரி அரசியலமைப்பின் கீழ் தெரிவு செய்யப்படும் 95 அங்கத்தினர் களில் 42 பேர் சிறுபான்மையினங்களிலிருந்து தெரிவு செய்யப்படுவரென்று கூறப்பட்டது. சுதந்திரம் கிடைத்து நான்கு வருடங்களுள் சிறுபான்மையினருக்கு முக்கியத்துவமளிக்கும் முழுப் பிரதிநிதித்துவத்திட்டமும் பூரணமாகத் திரிபு

படுத்தப்பட்டது. சுமார் பத்து இலட்சம் முஸ்லிம்களினதும் தமிழரினதும் குடியுரிமை மற்றும் வாக்குரிமையைப் பறித்து, பாராளுமன்றத்தில் அவர்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமற்செய்த பிரஜாவுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டமையே இந்நாட்டில் சிறுபான்மையினங்களுக்கெதிராக விழுந்த முதல் அடியாகும். இது அந்த நேரத்தில் 68% மானோராகவிருந்த பெரும்பான்மைச் சிங்களச் சமூகம் பாராளுமன்றத்தில் 80% ஆன ஆசனங்களைக் கைப்பற்ற வழிவகுத்தது. பிரஜாவுரிமைச் சட்டங்கள், இந்த நாட்டிலுள்ள முஸ்லிம்களையும், தமிழர்களையும் சந்தேகத்துக்குரிய குடிமக்களாக்கியது. வாக்காளர் நிரல்களில் பெயர்களைப் பதிவுசெய்தல், தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சிங்கள மக்களுக்கு எவ்விதத்தொல்லையும் தராத பல்வேறு விடயங்களில் நாம் பல கஷ்டங்களை இன்று அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். இது மிகவும் பாரபட்சம் நிறைந்த, ஓரவஞ்சனையான ஒரு சட்டவாக்கமாகும். இது நிறைவேற்றப்பட்டு, சந்தேகத்திற்குரிய பிரஜைகளுக்கு வேலை வழங்கப்படக்கூடாதென்று திணைக்களங்களுக்குச் சுற்றுநிருபங்கள் அனுப்பப்பட்டதோடு, முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் உணவுப் பங்கீட்டுப் புத்தகம் வழங்கும் விடயத்திலும் பிரஜாவுரிமை நிரூபிக்கப்படவேண்டியதாயிற்று. இன்றுள்ள சட்டங்களின் பிரகாரம் எதிர்காலத்தில் பிறக்கும் முஸ்லிம்களும், தமிழர்களும் கால ஓட்டத்தில் தமது பிரஜாவுரிமையை நிரூபிக்க வேண்டுமெனில் அவர்கள் இலங்கையில் தமது பிறப்பையும், இன்னும் ஒரு தொடரான தமது முன்னோர்களின் பிறப்பையும் நிரூபிக்கவேண்டிய நிலையில் இருப்பர்.

## அரசகரும மொழிச் சட்டம்

1956 இல் அரசகரும மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, சிங்களமும் தமிழும் பாடசாலைகளில் போதனா மொழிகளாக்கப்பட்டதும் முஸ்லிம்கள் இந்த மாற்றத்தை ஏற்றுச் சிங்களம் கற்றுக்கொள்ள விரும்பினர். குறிப்பாகச் சிங்கள மொழி பேசும் பிரதேசங்களில், நகர்ப்புறங்களில் வசித்த பலர்

தமது பிள்ளைகளுக்குச் சிங்கள மொழிமூலக் கல்வியை வழங்கினர். இதன் விளைவாகச் சிங்கள மொழி பேசும் பிரதேசங்களில் ஒரு புதிய தலைமுறை முஸ்லிம் இளைஞர்கள் தோன்றியுள்ளனர். இவர்கள் தமிழை மிகவும் குறைவாகவே பேசுகின்றனர், அல்லது அறவே பேசுவதில்லை. அவர்கள் இப்பொழுது பள்ளிவாசல்களில் இஸ்லாமியப் போதனைகளும் தமக்கு விளங்கக்கூடிய ஒரே மொழியாகிய சிங்களத்திலேயே இடம்பெற வேண்டுமென்று கோருகின்றனர். இம்மாற்றம், இப்பொழுது முஸ்லிம்களை சிங்கள மொழியில் போதிய மார்க்க நூல்கள் மற்றும் வாசிப்பு பொருட்களைத் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டிய பிரச்சினைக்கும் சமூகத்தில் சிங்களம் பேசுவோருக்கும் தமிழ் பேசுவோருக்குமிடையில் ஏற்படக்கூடிய பிளவைத் தடுப்பதற்கும் வழிவகைகள் காணவேண்டிய நிலைக்கு தள்ளியுள்ளது.

சிங்கள மொழி பேசும் பிரதேசத்திலாயினும் சரி, தமிழ்மொழி பேசும் பிரதேசத்திலாயினும் சரி, சகல முஸ்லிம் பாடசாலைகளும் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளாகவே இருக்கின்றன. நிர்வாக மொழி சிங்கள மொழியாகவுள்ள சிங்கள மொழி பேசும் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களில் அனேகமானோர் தமது பிள்ளைகளைச் சிங்கள மொழியிலேயே கல்வி கற்க வைக்கவேண்டியுள்ளது. துரதிருஷ்டவசமாக நாட்டின் எந்தப்பகுதியிலும் முஸ்லிம் பிள்ளைகள் சிங்களமொழி மூலம் பல்கலைக்கழகப் பிரவேசம் வரை தமது கல்வியைப் பெறக்கூடிய ஒரு தனி சிங்களமொழி முஸ்லிம் பாடசாலை யாவது இல்லை. ஆகவே, அரசகரும மொழிச் சட்டம் வேறு எந்தச் சமூகத்தையும் விடக் கூடுதலான பாதிப்புக்களை முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது

## காணி அபிவிருத்திச் சட்டம்

எமது பொருளாதார அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் நிலமும், நீரும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த தேசிய வளங்களாகும். சுதந்திரம் கிடைத்த கையோடு அவை அபிவிருத்தி செய்யப்பட்டது இந்த மூலவளங்களைச் சகல

இலங்கையர் மத்தியிலும் நியாப்படி பங்கீடு செய்யும் ஒரு உணர்விலாகும். துரதிருஷ்டவசமாக சுதந்திரத்தின் பின்னர். இது வரை அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கள் பின்பற்றிய காணிக்கொள்கைகள் சிறுபான்மையினருக்குப் பாரிய பின்விளைவுகள் கொண்ட பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

அபிவிருத்தி செய்யப்பட்ட அரச காணிகளில் சிறுபான்மையோருக்கு நியாயப்படி சேரவேண்டிய பங்கு மறுக்கப்பட்டுள்ளது. காணிப்பங்கீடு இடம்பெறும் மாவட்டங்களில் சிறுபான்மை மக்களின் சனத்தொகை பெருமளவுக்கு மாற்றமுற்றுள்ளது. இது பல்வேறு இன மக்களிடையே பகைமை உணர்ச்சி வளர்ச்சிக்கு வித்திட்டு இனத்துவவன் செயல்களுக்கும் இட்டுச் செல்கின்றது. அனேகமான சந்தர்ப்பங்களில் இத்தகைய வன்செயல்களுக்குப் பலியானோர். சிறுபான்மை இனத்தவர்களே.

காணி அபிவிருத்தி மற்றும் காணிக் குடியேற்றம் போன்ற விடயங்களை உள்ளடக்கும் காணிக் கொள்கைகள் பாரிய முக்கியத்துவம் கொண்டவையாகும். குடியேற்றம், முஸ்லிம் மற்றும் தமிழ் சிறுபான்மையினங்களை மிகவும் மோசமாகப் பாதிக்கும் ஒரு மனக்குறைக்கான காரணியென்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி தனது 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் குடியேற்றம் நாட்டின் தற்போதைய இன அமைதியின்மைக்கு இட்டுச் சென்ற பாரிய மனக்குறைகிளில் ஒன்றென இனங் கண்டுள்ளது.

சுதந்திரத்துக்குச் சற்றுப் பின்னராகக் கிழக்கில் பாரிய நீர்ப்பாசனத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது விவசாயப் பூமிகளாக மாற்றப்படவிருந்த காணிகள் உள்ளூர் விவசாயிகள் மற்றும் குடியேறும் சிங்கள மக்களிடையே 50:50 அடிப்படையில் பகிர்ந்தலிக்கப்படுமென்று காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயக்க கூறியிருந்தார். அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த ஐ.தே.க. மற்றும் ஸ்ரீ ல.சு.க. அரசாங்கங்கள் இவ்வாக்கு

றுதியைக் காற்றில் பறக்க விட்டு, கிழக்கு மாகாண முஸ்லிம்களையும் தமிழரையும் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாகப் பலவீனப்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளைக் கையாண்டன. மாவட்டக் காணி அலுவலகங்களிலிருந்து கிடைக்கும் தகவல் களின் பிரகாரம் முஸ்லிம்களுக்குச் நியாயப்படி கிடைக்க வேண்டிய பங்கில் நாலில் ஒன்று கூட அவர்களுக்குக் கிடைக்க வில்லையென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் மக்கள் ஜனத்தொகையில் 74% ஆகவுள்ள பெரும்பான்மை யினச் சிங்களவார்களுக்கு நாட்டிலுள்ள சகல குடியேற்றத் திட்டங்களிலும் 85% க்கு மேற்பட்ட அரசு அபிவிருத்தி செய்த காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் கல்லோயாத் திட்டமும் திருகோணமலை மாவட்டத்தில் அல்லை, கந்தளாய், மொரவெவ மற்றும் பதவியா திட்டங்களும் கிழக்கு மாகாணத்தில் நன்கு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங் களுக்கான உதாரணங்களாகும். 1921 ஆம் ஆண்டின் குடிசன மதிப்புப் புள்ளிவிபரங்களின்படி திருகோணமலை மாவட்டத்தின் ஜனத்தொகையில் சிங்களவர் 3% ஆகவும், இணைந்த மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர் 4.5% ஆகவும் இருந்தனர். முழுக் கிழக்கு மாகாணத்தையும் எடுத்துக் கொண்டால் அங்கு 4% க்கும் குறைவான சிங்கள மக்களே இருந்தனர். ஆயினும் 1981 ஆம் ஆண்டின் குடிசன மதிப்புப் புள்ளிவிபரங்களின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களின் ஜனத்தொகை 25% மாக அதிகரிததிருந்தது. அம்பாரை மாவட்டத்தில் முதற் பொரும்பான்மையினராக விளங்கிய முஸ்லிம்கள் அரசாங்கத்தால் திட்டமிடப்பட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் இன்று சிறுபான்மை யினராக் கப்பட்டுள்ளனர்.

கல்லோயாத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை இலங்கை மக்களுக்குக் கிடைத்த ஒரு பெரும் வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். ஆயினும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்க

ளைப் பொறுத்த மட்டில் இத்திட்டம் முஸ்லிம் மக்கள் வசிப்ப தையும், காணிகளைச் சொந்தமாக வைத்திருப்பதையும் கட்டுப்படுத்தும் ஒரு திட்டமிட்டசதி என்று கூறினால் அது மிகையாகாது. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து கடைப் பிடிக்கப்பட்டு வந்துள்ள குடியேற்றக் கொள்கைகள் இதை நிரூபிக்கப் போதுமானவையாகும்.

கல்லோயா அபிவிருத்திச் சபையின் வாரிசாக வந்த ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை, ஹிங்குரா னையிலும் கந்தளாயிலுமுள்ள இலங்கை சீனிக் கூட்டுத் தாபனம், கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள இறக்காமம் ஓட்டுத் தொழிற்சாலை என்பவை எல்டீஓ அனுமதிப் பத்திரங்க ளோடு முஸ்லிம்கள் அபிவிருத்தி செய்து பயிரிட்ட செழிப்பான வயல் நிலங்களைப் பறித்தெடுத்து அவர்களுக்கு நஷ்டஈடோ, மாற்று நிலமோ வழங்காது அவர்களை நடுத் தெருவில் நிற்க வைத்தன. கிழக்கு மாகாணத்தில் இவ்வாறு எல்டீஓ அனுமதிப்பத்திரங்களோடு 80,000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை வைத்திருந்த முஸ்லிம் மக்கள் அவற்றிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள்.

கந்தளாய், குடியேற்றத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட முன்னர் ஒரு சிறு தமிழ் ஜனத்தொகையோடு கூடிய, பெரும்பான்மை முஸ்லிம் கிராமமாகும். இக்காலப்பகுதியில் தம்பலகாமம் பற்று, பொத்தானை என்னுமிடத்தில் 4,000 ஏக்கர் வயல் நிலத்தில் முஸ்லிம்கள் வேளாண்மை செய்தனர். 1952 இல் கந்தாளாய் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது அரசாங்கத்தின் வாக்குறுதி உள்ளூர் மக்களுக்கு 50% மும் மற்றும் ஏனையோருக்கு 50% மும் என்பதாகவே இருந்தது. ஆயினும் பின்னர் இவ்வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு 30 வருடங்களுக்கு மேலாக எல்டீஓ அனுமதிப் பத்திரங்களுடன் காணிகளை வைத்திருந்த முஸ்லிம் மக்கள் நஷ்டஈடு எதுவுமின்றி அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டு. இக்காணிகள் பின்னர் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தழிக்கப்பட்டன.

அக்பர்புரம் என்று தற்போது அழைக்கப்படும் பட்டுக்கச்சிப் பிரதேசம் ஆரம்பத்தில் மேய்ச்சல் தரையாக விருந்தது. இங்கும் முஸ்லிம்கள் விரட்டப்பட்டுச் சிங்களவர் குடியேற்றப்பட்டனர். இங்கு இப்பொழுதும் ஒரு முஸ்லிம் பாடசாலையும் பள்ளிவாசலும் காணப்படுகின்றன. 1958 இல் கந்தளாய் சீனிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டபோது மேலும் அதிகமான சிங்கள மக்கள் வந்து அல்லைக் கந்தளாய் வீதி ஓரமாகவிருந்த காணிகளில் குடியேறி, முஸ்லிம் களுக்குரிய காணிநிலப் பங்கை அவர்களுக்கு இல்லாமற் செய்தனர். கந்தளாய், பொத்தனைக்காடு பேராறு என்பன புராதன காலத்திருந்தே முஸ்லிம் கிராமங்களாகும். 1965 க்கு முன்னர் இப்பிரதேசத்தின் கிராமசபைத் தலைவரும் ஒரு முஸ்லிம் ஆவார்.

திருகோணமலை மாவட்டத்தில் ஆகப்பெரிய முஸ்லிம் கிராமமாகிய கிண்ணியா 40,000 க்கு மேற்பட்ட ஜனத்தொ கையைக் கொண்டு விளங்கியது. கந்தளாய் குடியேற்றத் திட்டத்தின்கீழ் தமது புராதன நிலங்களைச் சிங்களவரிடம் இழந்த ஏழை நிலமற்ற விவசாயிகள் வானாறு என்னுமிடத்தில் அமைந்திருந்த காட்டை வெட்டித் திருத்தினர். வானாறு, சுண்டியாறு, மணியரசன் குளம், சாவாறு, காளாருப்பு, வண்ணாத்திப்பாலம், கட்டுக்குளி, நடுவூத்து போன்ற இடங்க ளில் இவ்வாறு சுமார் 10,000 ஏக்கர் காணியில் விவசாயம் செய்த முஸ்லிம்கள் ஏறக்குறைய 3,000. 1967 இல் அரசு குசுமங்கட வானெல திட்டம் எனப்படுவதை அறிமுகஞ்செய்து இந்த முஸ்லிம்களையும் துரத்தியடித்தனர். வானெல பொலிஸ் நிலையம் நடுக்காட்டினுள் திறக்கப்பட்டது. இது முஸ்லிம் களைத் துரத்தி எல்டீஓ அனுமதிப்பத்திரங்களின் கீழ் முஸ்லிம் கள் அபிவிருத்தி செய்த நிலங்களைச் சிங்களவர் கபளீகரம் செய்ய உதவியது.

கிண்ணியா - தம்பலகாமம் வீதிக்கும் அல்லைக் கந்தளாய் வீதிக்கும் இடையிலிருந்த காணிகள் ஆரம்பத்தில் கிண்ணியா, குறிஞ்சிசாக்கேனி, ஆலங்கேணி மற்றும்

தம்பலகாமம் போன்ற கிராமங்களின் விஸ்தரிப்புக்கென ஒதுக்கப்பட்டிருந்தன. முதலைமடுவுக்கு அருகே சொண்டன்காடு என்னுமிடத்தில் புகையிலைக் கூட்டுத்தாபனம் ஏற்படுத் தப்பட்டபோது, கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் இந்த நிலங்க ளில் சட்ட விரோதமாக உட்புகத் தொடங்கி அங்கு பலாத்கார மாகக் குடியேறினர். திருகோணமலைக் கச்சேரியில் முஸ்லிம்க ளின் காணிகளுக்கான எல்டீஓ அனுமதிப் பத்திரங்கள் புதுபிக்கபடவில்லை. மாறாகச் சட்டவிரோதமாகக் இக்காணிக ளை அபகரித்த சிங்களவருக்குப் புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் , பாலஸ்தீனத்தில் யூதர்கள் அரபுக்களை அவர்களின் நிலங்களிலிருந்தும் வீடுகளிலிருந்தும் விரட்டியடிப்பதற்குக் கையான்ட கொள்கைகளையே கையான் டன.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தீகவாபி பிரதேசத்தில் காணிச் சுவீகரிப்பும் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமையும் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். இப்பொழுது சைத்திய அமைந்துள்ள இடத்தில் 1940இல் ஒரு புத்தபிக்கு வந்து வசித்தார். இப்பிரதேசத்தில் வேறு பௌத்தர் ஒருவர் தானும்இருக்கபில்லை. 1960 இல் திடீர்ரென்று பௌத்தர்கள் சிலர் சைத்தியவைச் சுற்றிவரவுள்ள சகல காணிகளையும் பௌத்த நோக்கங்களுக்காக அரசாங்கம் சுவீகரிக்கவேண் டுமென்று வற்புறுத்தினர்.

1964இல் அரசாங்கம் முன்னைநாள் அளவையாளர் நாயகம் திரு. ரட்னதுங்கவின் தலைமையில் இவ்விடயத்தை விசாரித்து அறிக்கை சமர்பிக்கவென ஒரு குழுவை நியமித்தது. பல பௌத்த அமைப்புகளின் கருத்துச் சமர்ப்பணங்களின் பின்னர் இறுதியில் சைத்தியவைச் சுற்றியுள்ள 500 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்குமாறு குழு சிபார்சு செய்தது. அதைவிடக் கூடுதலாக நிலம் எடுத்துக்கொள்ளபடமாட்டா

தென்று முஸ்லிம்களோடு உடன்பாடு காணப்பட்டது. இவ்வுடன்பாட்டை அப்பட்டமாக மீறும் வகையிலும், சிங்கள பௌத்தர்களின் வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான மேலும் 1000 ஏக்கர் விவசாயக் காணிகளை முஸ்லிம்களிடமிருந்து பிடுங்கியெடுக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கம் சட்டத்தையும் ஒழுங்கையும் குழி தோண்டிப் புதைக்கும் விதத்தில். பெரிய விசாரைக்கண்டம் என்னுமிடத்துக்குப் புல்டோஸர்களை அனுப்பி அரசாங்க உரித்து உறுதிகளின் கீழ் முஸ்லிம்களுக்கு உரியதான நெற்பயிர்ச் செய்கைப் பூமிகளை நாசமாக்கியது.

1978 நவம்பர் 22ஆந் திகதி நட்சா எனப்படும் தேசிய விவசாய மற்றும் பயிர் பன்முகப்படுத்தல் அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டது. இதுவோர் உலக வங்கிக் கருத்திட்டமாகும் . இக்கருத்திட்டம் 24,649 ஏக்கர்கள் செழிப்பற்ற பெருந்தோட்டக் காணிகள் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். இங்கு சிறு ஏற்றுமதிப் பயிர் வளர்க்கப்பட்டு, ஏழை நிலமற்ற விவசாயிகளும் குடியேற்றப்படவிருந்தனர். இத்திட்டம் ஹேவாஹெட்ட, நாவலப் பிட்டிய, அறநாயக்க மற்றும் எட்டியாந்தோட்டை தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கும் ஒன்றாகும்.

1980 ஜுலை 8ஆந் திகதிய புள்ளிவிபரங்களின் பிரகாரம் 767 சிங்களவர்களும், 17 தமிழர்களும். 3முஸ்லிம்களும் இதில் குடியேற்றப்பட்டனர். ஆயினும் இந்தச் செழிப்பற்ற பெருந் தோட்டங்களிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட உடலுழைப் பாளர்கள் 7,015 சிங்களவர்களும், 6,400 தமிழர்களும், 132 முஸ்லிம்களுமாவர்.

இப்பெருந்தோட்டங்களின் எல்லைகளில் வாழ்ந்த சகல முஸ்லிம் கிராம வாசிகளும் இப்பெருந்தோட்டங்களில் வேலை செய்த தொழிலாளர் ஆவர். நிலமற்ற கிராமவாசிகள் மீள்குடியேற்றம் செய்யப்படும் பொழுது, முஸ்லிம்களுக் கும்அவர்வளுக்குரிய பங்கு வழங்கப்படுமென்று உறுதிமொழி வழங்கப்பட்டது. இன்று நட்சா திட்டத்தின் கீழ் கம்பளை, ஹேவாஹெட்ட, நாவலபிட்டி மற்றும் எட்டியாந்தோட்டையில்

இடம்பெற்ற குடியேற்றங்களில் முஸ்லிம் குடியேற்றம் எதுவுமே இடம்பெறாதது கவலைக்குரிய விடயமாகும்.

## பாதுகாப்பு

கிரிந்த, இரத்தினபுரி, காலி களுத்துறை, பாணந்துறை, களனி, தெஹிவளை, புத்தளம், பேருவலை போன்ற இடங்களில் கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள், இலங்கை முழுவதும் சிதறுண்டு வாழும் முஸ்லிம் மக்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் இந்நாட்டில் பாதுகாப்பு இல்லை என்பதை மீண்டும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன. 1983 ஜூலை வன்செயல் நிகழ்வுகளின் பின்னர், முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்கும் இரண்டாவது திட்டமொன்று குறித்து அவர்கள் அறிந்தபோது ஏற்பட்ட ஆழமான பாதுகாப்பின்மை மற்றும் அந்நியப்படுத்தல் உணர்வு குறித்து முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும்.

1983 வன்செயல்களின் போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் 298 பேர் எனவும், சுமார் 258 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள நஷ்டம் அவர்களுக்கு விளைவிக்கப்பட்டதெனவும் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அவ்வன்செயலின்போது, ஒலிபெருக்கிகள் மூலம் இடம்பெறும் “அதான்” தொழுகை அழைப்புகளின் சத்தத்தைக் குறைக்காவிடில் அல்லது முற்றாக நிறுத்தாவிடில் பள்ளிவாசல்களைத் தாக்கப்போவதாசச் சிங்களவர் மிரட்டி யுள்ளனர்.

புத்தளத்தில் 1975 ஆம் ஆண்டு பள்ளிவாசலில் ஐந்து முஸ்லிம்கள் ஆயுதந்தாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1984 ஜனவரியில் கண்டியில் மாவில்மடவில் ஸியராம் ஒன்றோடு கூடிய ஒரு பள்ளிவாசல் நாசமாக்கப்பட்டது. 1986 மே 17ஆந் திகதி கொழும்பு சிலேவ் ஐலனட் பகுதியிலும் சில முஸ்லிம்கள் இராணுவ உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இது ரம்ஸான்

மாதத்தில் அவர்கள் தராவீஹ் தொழுகைக்குப் போய்விட்டுத் திரும்பி வருகையில் இடம்பெற்றது. சில வருடங்களுக்கு முன்னர் இதே பள்ளிவாசலில், பள்ளிவாசல் ஒலிபெருக்கி இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கெதிரான விடயங்களுக்கு உபயோகிக்கப்படுவதற்கு எதிர்புத் தெரிவித்தவேளையில் பல முஸ்லிம்கள் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர்.

வரலாற்று ரீதியாகத் தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களும் முஸ்லிம்களும் வாழ்நதுவந்த பிரதேசங்களாக 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இனங்காணப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான முஸ்லிம் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் கொல்லப்பட்டும் காயமுற்றுமுள்ளனர். இலங்கையில் சமாதானத்தை நிலை நாட்ட இந்தியர்கள் வந்ததுமுதல் அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம் களின் தொகை 200,000 ஐத் தாண்டிவிட்டது. முஸ்லிம்களுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் இனத்துவ உரிமைகளுக்காகப் போராடுவோ ரென்று கூறப்படும் தமிழ்ப் போராளிகளினால் கொள்ளை யிடப்பட்டுள்ளன.

சிங்களவர், தமிழர் போன்று ஏனைய சமூகங்களும் இன்னல்களை அனுபவித்துள்ளன. ஆயினும் முஸ்லிம்களின் விடயம் வித்தியாசமானதாகும். அரசாங்கமும் அதன் ஆயுதப்படைகளும் சிங்களவருக்குச் சாத்தியமான சகல பாதுகாப்புகளையும் நிவாரணங்களையும் வழங்குகின்றன. ஆயுதந்தாங்கிய தமிழ் போராளிக் குழுக்களும், இந்திய அரசும், சர்வதேச தமிழர் சமூகமும் தமிழர்களுக்குப் பூரண ஆதரவு வழங்குகின்றன. ஆயினும், நிராயுதபாணிகளான முஸ்லிம்கள் இனப் போராட்டத்தில் எதுவித உதவியற்றோராக அகப்பட்டுள்ளனர். மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டடோர் முஸ்லிம்களாகவிருந்தபோதிலும் வெளியுலகும், குறிப்பாகச் சர்வதேச முஸ்லிம் சமூகமும், ஒருசில முஸ்லிம்கள் பாரளுமன்ற உறுப்பினர்க ளாகவும் இலங்கை அரசாங்கத்தில் அமைச்சர்களாகவும் இருக்கும் காரணத்தால் இலங்கைவாழ்

முஸ்லிம்களுக்கு எவ்விதமான மனக் குறைகளும் இல்லை யென்றும், இங்கு அவர்கள் மிகவும் மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துகின்றனர் எனவும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

1987 செப்ரெம்பரில் மூதூர் உதவி அரசாங்க அதிபர் ஜனாப் .ஹபீப் முஹம்மத் தமிழ்ப் போராளிகளால் ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டார். 1987 நவம்பரில் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான ஜனாப் ஏ.எல்.ஏ.மஜீட் கொல்லப்பட்டார். 1987டிசம்பரில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பெரும்பான்மைக் கிராமமாகிய ஓட்டமாவடியில் இந்திய அமைதிப்பமையினர் எறிகணைத்தாக்குதலில் ஈடுபட்டபோது 26 முஸ்லிம்கள் கொல் லப்பட்டு மேலும் 200 பேர் காயமடைந்தனர் சுமார் 14,000 முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டு வடமத்திய மாகானத்திலுள்ள பொலன்னறுவைக்கு அகதிகளாகத் தப்பியோடினர்.

1987 டிசம்பரில் மட்டபளப்புக்குத் தெற்குப் புறமாக 4மைல் தூரத்திலுள்ள 30,000க் கூடுதலான முஸ்லிம்களின் ஊராகிய காத்தான்குடி ஆயுதந்தாங்கிய தமிழ் போராளிகளின் தாக்குதலுக்குள்ளாகியது. இப்பயங்கரத் தாக்குதலில் 60 முஸ்லிம்கள் உயிரிழந்தனர். மேலும் 200 பேர் காயமுற்றனர். 200 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள முஸ்லிம்களின் சொத் துக்கள் அவர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு நாசமாக் கப்பட்டன . இவையனைத்தும் இந்திய அமைதிப்படையினரின் கண்களுக்கெதிரிலேயே நடந்தன.

1988 மார்ச் 6ஆந் திகதி காத்தான்குடி நகரசபையின் முன்னாள் தலைவர் அல்ஹாஜ் அகமட் லெப்பை படுகொலை செய்யப்பட்டார். 1990 இல் காத்தான்குடிப் பள்ளிவாசலில் தொழுகையிலீடுபட்டிருந்த 106 முஸ்லிம்கள் எல்ரீரீஈ யினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதே வாரத்தில் ஹஜ் யாத்தி ரையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தோர் உட்பட 86 முஸ்லிம் கள் கஞவாஞ்சிக்குடியில் வைத்துத் தமிழ்ப் போராளிகளால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

இரு வாரங்கள் கழித்து ஏறாவூரிலுள்ள சதாம் ஹுசெய்ன் கிராமம் தமிழர்களால் தாக்கப்பட்டு 100 ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் கொல்லப்பட்டனர்.

1989 நவம்பரில் ரீ.என்.ஏ. எனப்படும் தமிழ்த் தேசிய இராணுவம் காரைதீவு பொலிஸ் காவலரணைச் சுற்றிவளைத் தனர். அவர்களிடம் கனரக மோட்டார்களும் இந்திய அமைதிகாக்கும் படையினரிடமிருந்து பெற்றுக்கொண்ட வேறு உபகரணங்களும் இருந்தன. அவர்கள் தமிழர்களைப் போகும்படி கட்டளையிட்டுவிட்டு, 41 முஸ்லிம் றிசவ்பொலி ஸினரைத் தனியாகப் பிரித்து, கைதிகளாக்கி ஈவிரக்கமற்ற முறையில் கொலை செய்தனர். மன்னாரில் 200க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தமிழ்ப் பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டு ஈவிரக்கமற்றமுறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர். 1990 அக்டோபரில் வடமாகாணத்தில் 100க்கு மேற்பட்ட முஸ்லிம் கிராமங்களில் வசித்த சகல மக்களையும் எல்ரீரீஈ துரத்தியது. பல தலைமுறைகளாக வட மாகாணத்தில் வாழ்ந்த சுமார் 50,000 அப்பாவி முஸ்லிம் மக்கள் இன்று புத்தளம், குருணாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் அகதிமுகாம் களில் வாடுகின்றனர்.

1992 அக்டோபரில் பொலன்னறுவை மாவட்டத்தின் அக்பர்புரம், அகமட்புரம், பள்ளியகொடல்ல மற்றும் பங்குரானை ஆகிய கிராமங்களில் சுமார் 200 முஸ்லிம்களை எல்ரீரீஈ ஈவிரக்கமின்றிக் கொலைசெய்தது.

## உள்ளூராட்சி

புதிதாக இயற்றப்பட்ட பிரதேச சபைகள் சட்டம் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் (திருத்தச்) சட்டம் என்பவற்றின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளின் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்மந்தப்பட்டவிடையங்களில் தீர்மானமெடுக்கும் செயல்முறைகளில் முஸ்லிம்கள் பங்கேற் கும் சந்தர்பப்த்தை வழங்கத்தவறிவிட்டன.

1984 பெப்ரவரி 20ஆந் திகதி சர்வகட்சி மாநாட்டுக்கு ஐ.தே.க. சமர்ப்பித்த பிரேரணைகளில் 200-250 பிரதேச சபைகள் உருவாக்கப்படுமெனக் கூறப்பட்டது. அவற்றுக்குத் தேவையான அதிகாரங்களும் கருமப்பாடுகளும் வழங்கப்படுமென்றும் கூறப்பட்டது. அவற்றின் ஜனத்தொகையையும் ,மற்றும் மூலவளங்களையும் கருத்திற்கொண்டே, பிரதேச சபை எல்லைகள் கவனமாக வரையறை செய்யப்பட்டு அவற்றின் பொருளாதார நிலைத்தகவு மற்றும் ஸ்திரப்பாடு என்பவை உறுதி செய்யப்படுமெனவும் கூறப்பட்டது.

1986 ஜூன் 25 ஆந் திகதியிடப்பட்ட தமது அறிக்கையில் மேதகு ஜனாதிபதியவர்கள், சகல சமூகத்தினதும் அச்சத்தைப் போக்கும்வகையில் மாகாண அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் ஜனசமூக திசைமார்க்கம் கொண்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவு, உ.அ.அ. பிரிவுகளில் பிரதேச சபைகள் மற்றும் உள்ளூர் தன்னாட்சியின் வேறு அலகுகள் போன்ற, இனத்துவக் குழுக்களுக்குப் பெருமளவிலான உள்ளூர்த் தன்னாட்சியை வழங்கும் அமைப்புகளைத் தாபிப்பது குறித்து ஆராய்வதற்கு அரசாங்கம தயாராகவுள்ளதெனக் குறிப்பிட்டார்.

1981 இல் அபிவிருத்திச் சபைகளைத் தாபிப்பதற்கு முன்னர் 7,316 அங்கத்தினர்களைக் கொண்ட 546 கிராம சபைகளும், 528 அங்கத்தினர்களைக் கொண்ட 83 பட்டின சபைகளும் இருந்தன. உள்ளூராட்சி அமைச்சின் கீழ் நேரடியாக உள்ளூர் நிர்வாகத்துக்கென 241 உ.அ.அ. பிரிவுகள் தாபிக்கப் படுமுன்னர் 138 டி.ஆர்.ஓ. (பிரதேச இறைவரி உத்தியோகத்தர்)பிரிவுகள் இருந்தன. அரசாங்கம் எல்லைகள் மீள வரையும் குழுவொன்றை நியமித்து உள்ளூராட்சி அமைப்புகளின் நிர்வாகப் பிரதேச எல்லைகள் மீள வரைவு குறித்துத் தமது விருப்பங்களைக் கூறும்வகையில் கருத்துச் சமர்பனங்கள் செய்யுமாறு • பொதுமக்களை அழைப்பதை விடுத்து, நாட்டின் 25 மாவட்டங்களிலும் 3,695 அங்கத்தினர்களைத் தெரிவுசெய்யவேண்டிய 257 பிரதேச சபைகளையும், 416 அங்கத்தவர்களைத் தெரிவு செய்யவேண்

டிய 39 நகரசபைகளையும் 255 அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யவேண்டிய 12 மாநகர சபைகளையும் தாபித்தது. பிரத்தியேகமாக இந்த உப - தேசிய அலகுகள் உள்ளூர் மட்டத்தில் சிறுபான்மையோரின் அதிகாரப் பகிர்வுக்கு இடமளிக்கும் வகையில் அமையவேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கையில், இந்த முக்கியமான நடவடிக்கை அரசாங்கத்தினால் மக்களைக் கலந்தாலோசிக்காது ஒருதலைப்பட்சமாக எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிச் சபைகளின் நிரலையும் உள்ளூராட்சிச் சபைகள் அமைக்கப்பட்ட முறைகளையும் பார்க்கும்போது முஸ்லிம் சமூகத்தின் நலன்கள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம். முஸ்லிம்களாகிய எமக்கு, எமது தேசிய இன விகிதாசாரப்படி அமையவேண்டிய பிரதேசசபைகளோ, நகர சபைகளோ, மாநகர சபைகளோ இன்று இல்லை. முஸ்லிம்கள் முழு ஜனத்தொகையில் 8% ஆகவிருப்பதால், உள்ளூர் மட்டத்தில் சிங்களவர் போன்றும், தமிழர் போன்றும் நிர்வாக மற்றும் அபவிருத்தி நடவடிக்கைகளில் பயனுறுதியுள்ள வகையில் பங்கேற்பதாயின் முஸ்லிம்கள் பெரும்பான்மையான 21 பிரதேச சபைகளில் 281 அங்கத்தினர்களையும், 3 நகர சபைகளில் 32 அங்கத்தினர்களையும், ஒரு மாநகர சபையில் 19 அங்கத்தினர்களையும் தெரிவுசெய்யும் சட்டநிலைத் தகவுள்ள உரிமை எமக்கு இருத்தல் வேண்டும். 1981இல் கிழக்கு மாகாணத்துக்குரிய குடிசன மதிப்புப் புள்ளிவிபரம் 42% தமிழர்கள், 33% முஸ்லிம்கள் மற்றும் 25% சிங்களவர் இருப்பதைக் காட்டுகின்றது. ஆயினும் தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி அதிகாரசபை நிரலில் 25% மான சிங்களவர்களுக்கு 12 பிரதேச சபைகளும், ஒரு நகர சபையும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில் 33% மான முஸ்லிம்களுக்கு 16 பிரதேச சபைகளும், ஒரு நகர சபையும் தரப்படல் வேண்டும் . திருகோணமலை மாவட்டத்தில் 34% ஆகவுள்ள சிங்களவர்களுக்கு 5 பிரதேச சபைகள் வழங்கப்பட்டுள்ளபோது, 29% மான

முஸ்லிம்களுக்குக் குறைந்தது 4 பிரதேச சபைகளாவது வழங்கப்பட வேண்டும். ஆயினும் முஸ்லிம்களுக்குக் கிடைத்திருப்பது 2 பிரதேச சபைகள் மாத்திரமே.

கொழும்பு, பேருவளை, ஹாரிஸ்பத்து, புத்தளம், பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, இறக்காமம், காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, மூதூர், கிண்ணியா, தோப்பூர் குச்சவெளி, முசலி, எருக்கலம்பிட்டி, கற்பிட்டி, குளியாப்பிட்டி, தம்பலகாமம், தமன்கடுவை, லங்காபுர, வெலிமடை, மாவனல்ல, உடுநுவர மற்றும் மெததும்பர போன்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இலகுவாக பெரும்பான்மை உள்ளூராட்சிச் சபைகளை உருவாக்க முடியும்.

கிழக்கு மாகாணத்திலுள்ள 12 முஸ்லிம் பிரதேச சபைகளுக்கும் பொருளாதார மூலவளங்கள் ஒதுக்கீட்டு விடயத்திற்கூட மாபெரும் அநீதி இழைக்கப் பட்டுள்ளதால் அவற்றுள் அநேகமானவை பொருளாதார ரீதியில் நிலைதகவு அற்றவையாக விளங்குகின்றன. அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன ரீதியில் பிரதேச சபைகள் அமைக்கப்பட்டபோது, சட்ட ரீதியாக முஸ்லிம்களுக்கு சொந்தமான இயற்கை மூலவளங்கள் பிரித்தெடுக்கப்பட்டு, புதிய தமிழ்ப் பிரதேச சபையாகிய ஆலையடிவேம்போடு சேர்க்கப்பட்டன. 13,000 தமிழர்களுக்குரிய ஆலையடி வேம்பு பிரதேச சபைக்கு 37 சதுர மைல்கள் நிலப்பரப்பும் கருங்கொடித்தீவு என இப்பொழுது அழைக்கப்படும் அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவின் எஞ்சிய பகுதியில் 23,000 முஸ்லிம்களுக்கு 20 சதுர மைல் நிலப்பரப்பும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ் பிரதேச சபையின் ஆதிக்க அதிகாரத்தின்கீழ் வரும் 37 சதுர மைல் பிரதேசத்தில் 20 சதுர மைல்கள் இப்பொழுது முஸ்லிம் பிரதேச சபையின் கீழிருக்கும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வயல் காணிகளாகும்.

முஸ்லிம் பெரும்பான்மை அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முஸ்லிம்களின் பிரதேச சபைக்கு அவர்கள் விரும்பிய பெயர் கூட வைக்கப்படாமல் தவிர்க் கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்த உள்ளூராட்சி அமைச்சரிடம், உள்ளூராட்சிச் சபைகளின் நிரல் வர்த்தமானியில் பிரசுரிக்க முன்னர் நேரடியாக இது பற்றி புகார் செய்யப்பட்டபோதும், அவர் தனது தீர்மானத்தை மாற்ற மறுத்துவிட்டதால் அக்கரைப்பற்றைப் பிரதிநித்துவம் செய்த இரு ஐ.தே.க. முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களால் இந்த அநீதியைப் போக்கும் விதத்தில் எதுவும் செய்ய முடியவில்லை. ஆயினும் ஒரேயொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரின் சக்தி கூடுதலாகவிருந்தது. இப்பெண் அங்கத்தவர் தான் விரும்பிய பிரகாரம் விடயங்களைச் சாதிக்கக்கூடியவராக இருந்தார். அவர் ஐ.தே.க. அதிகாரப் படிமுறையினரின் ஆசீர்வாதத்தோடு அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தமிழ் மக்களுக்கென ஆலையடிவேம்பு பிரதேச சபையை நீதி நியாயத்திற்கு முரணான முறையில் பெற்றுக் கொடுத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் ஜனத்தொகை அடிப்படையில் பார்க்கும்போது சிங்களப் பிரதேச சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு, முஸ்லிம் பிரதேச சபைகளுக்கு ஒதுக்கிய ளிக்கப்பட்ட நிலப்பரப்பைவிட 13 மடங்கு அதிகமானதாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனையிலும், திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா, தம்பலகாமம் தோப்பூர் மற்றும் குச்சவெளி யிலும் மிகவும் மோசமான பாரபட்சங்கள் இடம்பெற்றுள்ளன.

**மாகாண சபைகள்**

இனத்துவ மனக்குறைகள் ஒரு சமூகத்துக்கோ அல்லது ஒரு மதத்தைப் பின்பற்றுவோருக்கோ மாத்திரம் உரியவையன்று. இலங்கையில் சிங்களவர்களுக்கும்,

தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் மனக்குறைகள் உள்ளன. இனத்துவ மனக்குறைகளைத் தீர்த்து வைப்பதற்குப் பல்வேறு அரசியல் தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்பிரேரணைகள் அனைத்துக்கும் பொதுவான அம்சமாகவிருப்பது அதிகாரப் பகிர்வின் அலகும் அதிகாரப் பகிர்வுமாகும்.

அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தினதும் மாகாண சபைகள் சட்டத்தினதும் ஏற்பாடுகள் இலங்கையில் இனத்துவ மனக்குறைகளைத் தீர்ப்பதற்கான, அனேகமாகத் தீர்க்கப்படாதவையும் அரைகுறையானவையுமான பிரேரணை களின் தொகுதியாகவே கொண்டுள்ளன. இவ்வேற்பாடு களில் வழங்கப்பட்டுள்ள மாகாணசபைச் சட்டம் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் மனக்குறைகளைத் தனித்தனியாகத் தீர்க்கக் கூடிய முறையில் அமையவில்லை. மாகாணசபை முறைமை வட-கிழக்கு மாகாண முஸ்லிம்களின் சட்டநிலைத் தகவுள்ள உரிமைகளை அங்கீகரிக்கத் தவறிவிட்டது. அது அவர்களின் இனத்துவ மற்றும் அரசியல் அபிலாஷைகளை அங்கீகரிக்க வில்லை. அது அவர்களின் சமூக, பொருளாதார நலன்களைப் பேணவில்லை. அது அவர்களுக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை.

முன்னைநாள் நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவும் அவரின் அடியாட்களும் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகளை நாசமாக்கிவிட்டனர். 1987ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம், போராளிகளினால் ஆயுதக் கையளிப்பு மற்றும் பகை நடவடிக்கைகள் நிறுத்தம் ஏற்பட்டாலன்றித் தற்காலிக இணைப்புக் குறித்த ஜனாதிபதியின் பிரகடனத்தைத் தடை செய்கின்றது. இதை அப்பட்டமாக மீறி, நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர்ஜயவர்தன அவசரகால நிலையின்கீழ் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை உபயோகித்துத் தற்காலிக இணைப்பொன்றைச் செய்வதற்குத் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தியுள்ளார். இதன் மூலம் வட-கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகத்தைத் தமிழர்களின் ஆதிக்கத்தின் கீழ் அரசியல்

அடிமைகளாக மாற்றினார். வட மாகாண ஜனத்தொகையில் தமிழர்கள் 90% க்கு மேற்பட்டோராயிருக்கின்றனர். வட-கிழக்கு இணைப்பின் குறிக்கோள் தமிழ் மக்களைப் பூரண பெரும்பான்மையினராக்குவதோடு, கிழக்கு மாகாணத்தின் 33% மான முஸ்லிம்களை இணைந்த அலகில் 70% தமிழர் ஆதிக்கத்தில், ஒரு பொருட்டல்லாத 18% வீதச் சிறுபான் மையினராக ஆக்குவதாகும்.

70% தமிழ்ப் பெரும்பான்மையோடு கூடிய வட-கிழக்கு மாகாணசபைக்கு அரசியலதிகாரம் மாற்றப்படுவது இப்பிரதேசத்தில் தமிழர்களைப் போன்று சம உரிமைகள் கொண்ட சுதந்திர முஸ்லிம் சமூகத்துக்குரிய போதிய பாதுகாப்புகளோடு செய்யப்படவில்லை. தனித்தனியான அதிகாரப் பகிர்வு அரசியல் மற்றும் நிர்வாக அலகுகள் உருவாக்கப்படாமையால், பிரத்தியேகமாகச் சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணிக்குடியேற்றம் குறித்த பெருமளவு அதிகாரங்கள் மாகாண சபைக்கு வழங்கப்படும்போது முஸ்லிம்கள் ஒரு சாதகமற்ற நிலையில் இருப்பர். இணைந்த வட-கிழக்கு மாகாண சபை முழுக்க முழுக்கத் தமிழ் போராளிகளைக் கொண்டிராவிடினும், பிரதானமாக அவர்களைக்கொண்ட ஒரு பொலிஸ் படை இருக்கும். வரலாற்று ரீரியாகத் தாம் வாழ்ந்துவந்த பிரதேசங்களில் தொடர்ந்தும் தமிழர்களின் பயங்கரவாதத்தினால் ஆக்கிரமிக்கப் படுவதை முஸ்லிம்கள் விரும்பவில்லை. அத்தோடு இணைந்த மாகாணத்தில் அரச காணிகளில், பாரிய நீர்ப்பாசனத் திட்டங் கள் அமைந்த காணிகள் நீங்கலாக குடியேற்றம் 70% தமிழ் ஆதிக்க மாகாண சபையின் கட்டுப்பாட்டின்கீழ் வரும். ஆதலால் இணைந்த பிரதேசத்தில் வரலாற்று ரீதியாக முஸ்லிம்கள் வசித்துவந்த காணிகள் இனங்காணப்பட்டு, தமிழர் குடியேற்றம் இடம்பெறாதவாறு பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

முஸ்லிம்களாகிய நாம் இலங்கைப் பிரஜைகளென்ற வகையில் சட்டநிலைத் தகவுப்படி எமக்கு உரியதைவிட

மேலதிகமாக எதையும் கேட்டதில்லை. ஒவ்வொர் இனத்துவச் சமூகமும் தனது உரிய பங்குக்கு உரித்துள்ளதாகும் நாம் தனிநாடு கேட்கவுமில்லை, எமது மனக் குறைகளைத் தீர்த்துக்கொள்ளப் பயங்கரவாத நடவடிக்கைகளை நாடவுமில்லை. இலங்கையில் முதல் தடவையாகச் சிறுபான்மை இனங்களோடு அதிகாரத்தைப் பகிர்ந்துகொள் வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே முஸ்லிம்களாகிய நாம் உதாசீனப்படுத்தப்படுவதையும், எமது சட்டநிலைத்தகவுள்ள உரிமைகள் மறுக்கப்படுவதையும் விரும்பவில்லை.

இனத்துவ மனக்குறைகளைத் தீர்க்கும் அதிகாரப் பகிர்வின் அலகு மாகாண சபையொன்றால், 74% மான சிங்களவருக்கு 7 மாகாண சபைகளும், 18%மான தமிழர்களும் 2 மாகாண சபைகளும், 8%மான முஸ்லிம்களுக்கு 1 மாகாண சபையும் ஏற்படுத்துவதே நீதியான ஓர் ஏற்பாடாகும். இலங்கையிலுள்ள பெரிய இனத்துவ சமூகங்களிலொன்று என்ற வகையில், சிங்களவர் மற்றும் தமிழரைப் போன்று முஸ்லிம்களும் எமது சொந்த முதலமைச்சர் மற்றும் அமைச்சர் சபையைத் தெரிவுசெய்யக்கூடிய ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபையைப் பெற்றுக்கொள்வது எமது சட்டநிலைத் தகவுள்ள உரிமையாகும்.

இன்று இலங்கையில் நிலவுவது இனத்துவப் பிரச்சினை களேயன்றித் தமிழ்ப் பிரச்சினைகள் அன்று. சிங்களவர், தமிழர் கள், முஸ்லிம்கள் அனைவருக்கும் இனத்துவ மனக்குறைபாடு கள் உண்டு. எனவே, அதிகாரப் பகிர்வின் வகையும், அலகும் சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருப்பதோடு, அனைவ ரின் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதாகவும் அமைதல் வேண்டும். பெரிதும் மையப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி முறை மைக்கும், பிரிவினைக்குமிடையில் ஒரு நல்லிணக்க ஏற்பா டாக, அதிகாரம் அனைவரிடையிலும் பங்கிடப்படுதல் வேண்டும். அங்குமிங்கும் ஒட்டுப்போடுதலும் அரைகுறை நடவடிக்கைக ளும் தீர்வை மேலும் சிக்கலாக்கவே உதவும்.

இவ்வாறு கைமாறும் அதிகாரங்கள் இனத்துவச் சிறுபான்மை யினராகிய தமிழரும் முஸ்லிம்களும் தாம் பொரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவும், தீர்மானமெடுக்கும் செயல்முறைகளில் பூரணமாகப் பங்கேற்க உதவுவதாகவும் இருத்தல் வேண்டும்.

கிழக்கு மாகாண நிலப் பிரதேசங்களை 1981 ஆம் ஆண்டின் இனத்துவ விகிதாசாரத்துக்கு ஏற்ப மீள்வரையறை செய்வதே சாத்தியமான ஒரேயொரு தீர்வாகும். கிழக்கு மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பு 3,839 சதுரமைல்களாகும். 24%மான சிங்களவர்களுக்கு 960 சதுர மைல்களும், 42% மான தமிழர்களுக்கு 1762 சதுர மைல்களும், 33%மான முஸ்லிம்களுக்கு 1267 சதுர மைல்களும் வழங்கப்பட வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் பிந்தன்னைப்பத்துவும், வெவகம்பத்து வடக்கும், திருகோணமலைத் தேர்தல் தொகுதியின் சிங்களப் பெரும்மான்மைப் பிரதேசங்களும் சிங்கள அலகாக விளங்க முடியும். முஸ்லிம் பெரும்பான்மைத் தேர்தல் தொகுதிகளாகிய அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், கல்முனை, சம்மாந்துறையும், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் பிரதேச சபைப் பிரதேசங்களான காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, மூதூர், கிண்ணியா மற்றும் தம்பலகாமம் முஸ்லிம் அலகாக நிர்ணயிக்கப்படலாம். கிழக்குமாகாணத்தின் எஞ்சிய பிரதேசங்கள் தமிழ் அலகாக இருக்க முடியும்.

## பாராளுமன்றம்

### தேர்தல் மாவட்டங்களின் எல்லை மீள் வரைவு

1978 ஆம் ஆண்டின் ஐ.தே.க. - ஜயவர்தன அரசிய லமைப்பு சிபான்மையினருக்கான பாதுகாப்புகளை இல்லாமற் செய்த விடயத்தில் அதற்கு முன்பு இருந்த அரசியலமைப்பைப் போலவே விளங்குகின்றது. சோல்பரி அரசியலமைப்பின் 29ம் பிரிவின் ஏற்பாடுகளை மீளவேற்படுத்துவது, நியமன உறுப்பினர் குறித்த கோட்பாடுகளை மீளவும் சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் செனட் சபைக்குப் புத்துயிரளித்தல் போன்ற விடயங்களில் அக்கறை காண்பிக்கப்படவில்லை. தேர்தல் மாவட்டங்களின் எல்லை மீள் வரைவு குறித்துச் செய்யப்பப்பட்ட ஏற்பாடுகள் மேலும் நாசகரமானவை ஆகும்.

**உறுப்புரை 96**

1) எல்லை மீள்வரைவு ஆணைக்குழு இலங்கையை இருபதுக்குக் குறையாதவையும் இருபத்து நான்குக்கு மேற்படாதவையுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்த மைத்து, அவற்றுக்குப் பெயர்களையும் வழங்கும்.

2) இலங்கையின் ஒவ்வொரு மாகாணமும் ஒரு தேர்தல் மாவட்டமாக அமையும் அல்லது இரண்டு அல்லது மூன்று தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படும்.

3) ஒரு மாகாணம் பல தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப் படும் இடங்களில், நடைமுறைச் சாத்தியமான அளவுக்கு ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் ஒரு நிர்வாக மாவட்டங்க ளின் இணைப்பாக அல்லது இரண்டு - மூன்று தேர்தல் தொகுதிகள் ஒன்றுசேர்ந்து ஒரு நிர்வாக மாவட்டமாக அமைவதை மீள் வரைவு ஆணைக்குழு உறுதிசெய்யும் வகையில் தற்போதுள்ள நிர்வாக மாவட்டங்கள் குறித்துக் கவனமாகச் செயற்பட வேண்டும.

4) ஒவ்வொரு மாகாணத்தினதும் தேர்தல் மாவட்டங்கள் ஒன்றுசேர்ந்து (இத்தகைய தேர்தல் மாவட்டங்களின் தெரிவுசெய்வோர் பதிவேடுகளிலுள்ள பெயர்களின்படியான தொகையினரின் பிரகாரம் தெரிவுசெய்து அனுப்புவதற்கு உரித்துள்ள அங்கத்தவர்களின் தொகைக்கு மேலதிகமாக) மேலும் நான்கு அங்கத்தினர்களைத் தெரிவு செய்ய உரிமை கொண்டவையாகும். எல்லை மீள்வரைவு இத்தகைய உரித்தை, தேர்தல் மாவட்டங்களிடையே ஒப்புரவாக ஒதுக்கியளிக்கும்.

1978 ஆம் ஆணடின் ஜயவர்தன அரசியலமைப்பு அது நடைமுறைக்கு வந்து மூன்று மாதங்களுள் ஏற்படுத்தபட்ட எல்லை மீள்வரைவு ஆணைக்குழுவைத் தவிர, வேறு ஏதாவது இத்தகைய எதிர்கால ஆணைக்குழுவொன்றை அமைப்பது குறித்துச் சிந்திக்கவில்லை. ஆகவே, அது செய்துள்ள தேர்தல் மாவட்டங்களின் எல்லை மீள் வரைவு எக்காலத்துக்குமான, இறுதியான ஒன்றாகும். உறுப்புரை 96(4) இன் அடிப்படையில் ஒன்பது மாகாணங்களினதும் நிர்வாக மாவட்டங்களுக்குரிய 36 அங்கத்தினரும், உறுப்புரை 98 இன் அடிப்படையில் 160 அங்கத்தினர்களும் தெரிவாவர் என்பதும் ஒரு அறுதியாக முடிந்த முடிவாகும். அரசியலமைப்பை மூன்றிலிரண்டு பெரும்பான்மையால் மாற்றுவதன் மூலமே இவற்றையும் மாற்றியமைக்க முடியும். ஆயினும் தேர்தல் செயல்முறைமைகளுள் கொணரப்படட்டுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் இது நடைமுறைச் சாத்தியமற்ற அரசியலாகும். இது 1978 ஆம் ஆண்டின் ஜயவர்தன அரசியலமைப்பின் மிகவும் பிற்போக்கான அம்சங்களுள் ஒன்றாகும்.

மேலே கூறப்பட்ட ஏற்பாடுகளில் தேர்தல் மாவட்டங்களை மீள்வரைவு செய்யும் போது நாட்டில் சிறுபான்மை மக்களும் உள்ளனர் என்னும் விடயத்திற்கும் கவனஞ் செலுத்தவேண்டுமென்று மீள் வரைவு ஆணைக்குழுவுக்கு எந்தவிதமான அறிவுறுத்தல்களும் தரப்படவில்லை யென்பதை நாம் தெளிவாகக் காண முடியும். வேறு வார்த்தைகளிற் கூறுவதாயின், 1978 ஆம் ஆண்டின் அரசியலமைபபில்

சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் குறித்த ஏற்பாடுகள் இடம்பெறுவது, வேண்டுமென்றே தவிர்க்கப் பட்டுள்ளது.

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் ஓர் எல்லை மீள் வரைவு ஆணைக்குழு நியமிக்கப்பட்டபோது, ஆணைக்குழு மாகாணத்தில் போக்குவரத்து வசதிகளையும் அதன் பௌதிக அம்சங்களையும், ஜன சமூகத்தையும், அங்கு வாழ்வோரின் நலன்களின் பல்புடைத் தன்மையையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டுமென்று 41 ஆம் பரிவில் குறித்துரைப்பான வழிகாட்டலொன்று அடங்கியிருந்தது. அவ்வாறு செய்யும்போது, அதாவது மாகானமொன்றைக் தேர்தல்மாவட்டங்களாகப் பிரிக்கும்போது, மாகாணத்தின் எப்பிரதேசத்திலாயினும் ஜாதி, மதம் அல்லது வேறு காரணியால் நலன்களில் ஜனசமூகமாக ஐக்கியப்பட்ட நபர்கள், பிரதேசத்தின் பெருபான்மை மக்களிலிருந்து இவற்றில் ஏதாவதொரு அம்சத்தில் வித்தியாசப்பட்டு, கணிசமான அளவு செறிவாக வாழ்கின்றனர் என்று ஆணைக்குழுவுக்குத் தென்படுமிடத்து, ஆணைக்குழு மாகாணத்தை தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கும்போது அந்த நலன் பதிரதிநிதித்துவப்படுத்தப்படக்கூடிய முறையில் அதைச் செய்ய வேண்டுமென்ற மேலதிகமான, குறித்துரைத்த வழி காட்டல் ஒன்றும் இருந்தது.

அரசியலமைப்பின் கீழ் நியமனம் பெற்ற எந்தவோர் எல்லை மீள் வரைவு ஆணைக்குழுவும், மாகண மொன்றைத் தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கும்போது பொதுநலனைக் கொண்ட ஒரு தேர்தல் மாவட்டத்தை எல்லை மீள்வரைவு செய்யும் போது, சிறு பான்மைக் குழுக்களைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டுமென்பதும், அவர்கள் சாதியிலோ மதத்தாலோ அல்லது வேறு எந்தப் பொதுநலன் அடிப்படையிலோ இணைந்த மக்களாகவிருந்தால், இத்தகைய குழுவும் சட்டசபையில் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய முறையில் ஆணைக் குழு செயற் படுமென்பதும் இதன் செறிந்த சாராம்சமாகும். அந்த அரசியலமைப்பின் கீழ் நியமனம் பெற்ற எந்தவோர் எல்லை மீள் வரைவு ஆணைக்குழுவும், மாகா

ணம்மொன்றைத் தேர்தல் மாவட்டங்களாகப் பிரிகும் போது பொது நலனைக் கொண்ட ஒரு சிறுபான்மையினர் குறிதத நிபந்தனைகளை அலட்சியம் செய்திருந்தால், இவ்வேறுபாட்டின் நியதிகளை மீறியே செயற்பட்டிருக்கும்.41(3) பிரிவில் இடம் பெற்ற வழிகாட்டலில், சிறுபான்மையோர் நலன்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படும் விடயத்தில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் இயன்ற அளவுக்குச் சமமான தொகையினரான நபர்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்ற பொதுவான விதி பொருந்தாதென்பது மிகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. பொதுவான நலன்களைக் • கொண்ட ஒரு சிறுபான்மைக் குழுவின் பிரதிநிதித்துவத்துக்கு வழி செய்யுமுகமாக ஒரு தேர்தல் மாவட்டம் உருவாக்கப்படுவது,ஒவ்வொருதேர்தல் மாவட்டமும் சமமான ஆட்கள் தொகையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்ற நிபந்தனையைப் புறத்தொதுக்கும் ஒரு நடவடிக்கையாகும். இந்த நிபந்தனைக்கும் மேலதிகமாகவே சோல்பரி அரசியலமைப்பின் கீழான எல்லை மீள் வரைவு ஆணைக் குழுவுக்கு ஏதாவ தொரு மாகாணத்தில் இரண்டு அல்லது மூன்று அங்கத்தினரைத் தெரிவு செய்யும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேட்பட்ட தேர்தல் மாவட்டங்களை உருவாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

1972 ஆம் ஆண்டின் திருமதி பண்டாரநாயக்க அரசியலமைப்பில் ஒரு பொது விதியாக, 75,000 பேருக்கு ஒரு தேர்தல் மாவட்டம் என்ற அடிப்படையிலும், விதிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கேற்ப 1000 சதுர மைலுக்கு ஒரு தேர்தல் மாவட்டம் என்ற அடிப்படையிலும் பிரிக்குமாறு எல்லை மீள் வரைவு ஆணைக்குழு கேட்கப்பட்டிருந்தது. இவ்விதிக்கப்பட்ட ஏற்பாடுகள் சிறுபான்மையினரின் நலன்கள் குறித்தவையாகவும், விசேட கவனம் பெற்றவையாகவும் இருந்தன.

இவ்வழிகாட்டல்களுக்கு நேரெதிரான முறையில், தற்போதைய அரசியலமைப்பில், மாகாணங்களைத் தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கும் விடயத்தில் இவ்வேறுபாடுகள் அறவே இல்லாத நிலையே உள்ளது. இது இலங்கையில்

வேறு எந்தச் சமூகத்தையும் விட, முஸ்லிம் சமூகத்துக் கெதிராகவே பிரயோகிக்கப்படுவதுபோல் தோன்றுகிறது.

**தேர்தல் - விகிதாசாரப் பிரதிநிதித்துவம்**

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் ஜயவர்தனவினால் அறிமுகஞ் செய்யப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையின் கீழ், முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைவிதியை நாம் கவனத்திற் கொள்ளும்போது, அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரை (6) ஆம் பந்தியிலுள்ள ஏற்பாட்டின் நிலைப்பாட்டோடு நோக்குகையில் நாடு முழுவதும் முஸ்லிம் சமூகம் எவ்வாறு பரந்துள்ளதென்பதை நுணுக்கமாகப் பரிசீலிப்பது அவசியமாகின்றது.

“எதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஏதாவதொரு தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்கு எண்ணிக்கையில் இருபதில் ஒன்றுக்குக் குறைவாகப் பெற்றுக்கொள்ளும் எந்த அரசியற் கட்சியும் அல்லது சுயேட்சைக் குழுவும், அத்தேர்தல் மாவட்டத்துக்கு அத்தகைய அரசியற் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் அபேட்சகர் தெரிவு செய்யப்படும் தகுதியை இழந்துவிடும்.”

வேறு வார்த்தைகளிற் கூறுவதாயின், தனது அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படும் தகுதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஓர் அரசியற் கட்சியோ அல்லது சுயேட்சைக் குழுவோ தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 5% க்குக் குறையாமல் பெற்றிருக்க வேண்டும். 22தேர்தல் மாவட்டங்களில் 11 இல் வேறு சமூகங்களோடு ஒப்பிடுகயைில் முஸ்லிம் வாக்காளர்களின் விகிதாசாரம் 5% ஐ விட மிகவும் குறைவானதாகும். இந்த மாவட்டங்களில் முஸ்லிம் மக்கள் பூரண ஒருமைப்பாட்டை எய்து, வாக்காளர் அனைவரும் ஒருமுகமாக முஸ்லிம் அபேட்சகர்களைக் கொண்ட ஒரு கட்சிக்கோ அல்லது சுயேற்சை குழுவுக்கோ வாக்களித்தாலும், தேவைப்படும் ஆகக்குறைந்த விகிதாசாரத்தை எட்ட முடியாது. ஆகவே, இந்த மாவட்டங்களில் முஸ்லிம்கள் தம்மைப் பிரதிநிதித்துவம் செய்யும் அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்படக் கூடிய தகுதியை இழந்துவிடுகின்னர்.

011895

தற்போதைய அரசியலமைப்பு அறிமுகஞ் செய்த தேர்தல் சட்டங்களின் பிரகாரம் வாக்காளர்கள் கட்சிகளுள் ஒன்றுக்கோ அல்லது சுயேட்சைக் குழுவுக்கோ வாக்களிக்க முடியும். இவர்களின் அபேட்சகர் நிரல் வாக்குப் பத்திரத்தில் இடம்பெற்றிருக்கும். ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஆகக் கூடுதலான தொகை வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் அரசியற் கட்சி அல்லது சுயேட்சைக் குழு தனது அபேட்சகர் சுயமாகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பை பெறுகின்றது. அவர் விருப்பு வாக்குளில் ஆகக்கூடுதலான தொகையைப் பெற்றிருப்பின். அவர் தெரிவு செய்யப்பட்டவராக அறிவிக் கப்படுகிறார் - உறுப்புரை 99. கட்சிகளுக்கு அல்லது சுயேட்சைக் குழுக்களுக்கு அளிக்கப்பட்ட செல்லுபடியற்ற வாக்குகள் ஏதுமிருப்பின். அவை அத்தேர்தல் மாவட்டத்தில் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் தொகை யிலிருந்து கழிக்கப்பட்டு . இவ்வாறு கழித்த பின்னர் கிடைக்கும் வாக்குகளின் தொகை (இயைபுள்ள வாக்குகளின் தொகை) இத்தேர்தல் மாவட்டத்துக்கு தெரிவாகவேண்டிய அங்கத்தவர்க ளின் தொகை ஒன்றால் குறைவுபடும் இலக்கத்தால் வகுக்கப்படுகின்றது. மட்டக்களப்பு. திருகோணமலை போன்ற தேர்தல் மாவட்டங்களுக்கு நான்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட் டுள்ளன. இங்கு முஸ்லிம் சமூகத்துக்கு என்ன நடக்கிறது? இம் மாவட்டங்களில் ஓர் அங்கத்தவர் தெரிவுசெய்யப்ப டுவதாயின் முஸ்லிம் நிரல் இயைபுள்ள வாக்குத் தொகையில் 1/3 ஐப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆயினும் முஸ்லிம்கள் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் முறையே **24%** ஆகவும் 29% ஆகவும் உள்ளனர். கொழும்பு மற்றும் திகாமடுல்ல தவிர ஏனைய தேர்தல் மாவட்டங்கள் அனைத் திலும் நிலைமை இதுவேயாகும் எனவே 75%க்கும் கூடுதலான முஸ்லிம் மக்கள் தனியாகத் தமது சொந்தச் சமூகத்தினால் தெரிவு செய்யபடும் அங்கததவர்கள் மூலம் தாம் பிரதிநி தித்துவம் செய்யப்படும் வாய்ப்பை இழக்கின்றனர். இந்த வாய்ப்பு சிங்களவர்களாலும். தமிழர்களாலும் பெரிதும் அனுபவிக்கப்படும் ஒன்றாகும்.

தற்போதைய விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையில் ஒரு வாக்காளர் தமது விருப்பத்தெரிவை ஒரு

கட்சியினது அல்லது சுயேட்சைக் குழுவினது மூன்று அபேச்ச கர்களுக்குத் தெரிவிக்கலாம். ஆயினும் அனேகமான தேர்தல் மாவட்டங்களில் ஐ.தே.க. வும் ஸ்ரீ ல.சு.க. வும் ஒன்று அல்லது இரண்டு முஸ்லிம் அபேட்சகர்களையே பெரும்பாலும் நியமிக் கின்றன. சில மாவட்டங்களில் எந்த முஸ்லிம் அபேட்சகரையும் நியமிப்பதில்லை. முஸ்லிம்கள் தமது மூன்று விருப்புரிமை வாக்குகளையும் பிரயோகித்துத் தமது சொந்த இனத்தவர்கள் மூலம் பிரதிநிதித்துவம் பெறும் சந்தர்ப்பம் மறுக்கப்ப டுவதுமல்லாமல், அவர்கள் தமது வாக்குகளை முஸ்லிம் அல்லாத அபேட்சகர்களுக்கு வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. தற்போதைய தேர்தல் முறைமை முஸ்லிம்களின் முன்னுரிமை வாக்குகளைப் பெற்று முஸ்லிம் அல்லாத சமூகத்தினர் தமக்கு உரியதல்லாத அனுகூலத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாகவுமுள்ளது.

தற்போதைய அரசியல் அமைப்பை மாற்றுவதெனில் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் மக்கள் வாக்கெடுப்பும் அவசியமென்று சொல்லப்படுகிறது. 1977இல் ஐ.தே.க.வுக்கு 5/6 பெரும்பான்மை கிடைத்ததோடு, முன்னை நாள் ஜனாதிபதி ஜயவர்த்தன புதிய விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையை அறிமுகம் செய்தார். இந்த முறைமையின் கீழ் எந்த அரசியல் கட்சியும் 2/3 பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வது பெரும்பாலும் இயலாத விடயமாகும். வேறுவார்த்தைககளிற் கூறுவதெனின் 1978 அரசமைப்பியலை அதில் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகள்மூலம் கூட சட்டபூர் வமாக மாற்றியமைப்பது இயலாதது. இது ஜயவர்த்தன அரசிய லமைப்பின் நச்சுத் தனமான அம்சங்களுள் ஒன்றாகும்.

இடைத்தேர்தல்களுக்கு விகிதாசார பிரதிநிதித்து வத்தைப் பிரயோகிக்க முடியாது. வெற்றிடங்கள் ஏற்படுகையில் தேர்தல் தொகுதி வாக்காளர்களின் அபிப்பிராயத்துக்கு எவ்வித மதிப்பும் இன்றி அல்லது நியமனம் பெறுபவருக்கு அம்மக் களோடு உள்ள தொடர்பு குறித்து எவ்விதத்திலும் ஆராயாது, கட்சி விசுவாசிகளைக் கொண்டு அவை நிரப்பப்படுகின்றன.

தேர்தல் மாவட்டங்களுக்கு வாக்காளர்களை பங்கிடுவதில் மோசமான ஏற்றத்தாழ்வுகள் உள்ள உதாரணங்களைக் காணமுடியும். இரண்டு தேர்தல் மாவட்டங்கள் ஒரு பொழுதும் சமமாக இருப்பதில்லை. உதாரணமாக, 1983 இல் கண்டி தேர்தல் மாவட்டத்தில் 12 அங்கத்தினருக்கு 602,232 வாக்காளர்கள், அதாவது ஒரு அங்கத்தவருக்கு 50,186 வாக்காளர்கள் வீதமிருந்தனர் . அதே வேளையில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 5 அங்கத்தினர்களுக்கு 128,590 வாக்காளர்கள், அதாவது ஒரு அங்கத்தவருக்கு 25,718 வாக்காளர்கள் வீதம் இருந்தனர். இதன் பிரகாரம் வன்னித் தேர்தல் மாவட்டத்திலிருக்கும் ஒரு வாக்காளர் கண்டி தேர்தல் மாவட்டத்திலுள்ள இரு வர்க்காளர்களுக்குச் சமமானவராகிறார்.

## முஸ்லிம் அல்லாத அரசியற் கட்சிகளிலிருக்கும் முஸ்லிம்கள்

ஒரு அரசியற் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முஸ்லிம் சமுகத்தின் அல்லது இஸ்லாத்தின் நலன்களுக்கு எதிரான பிரேரணைகள் சிலவெனினும் இடம் பெற்றிருப்பின் ஓர் உண்மையான முஸ்லிம் அத்தகைய ஓர் அரசியற் கட்சியின் விசுவாசமுள்ள ஓர் உறுப்பினராக விளங்க முடியாது. முஸ்லிம் சமூகத்துக்குத் தீங்கு ஏற்படுத்தும் விடயம் ஏதாவது இடம் பெறும்போது முஸ்லிம் அல்லாத அரசியற் கட்சிகளிலுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் தமது சமூத்தைப் பாதுகக்கும் முறையில் பொருத்தமான மேடைகளில் தமது வாய்களைத் திறந்து பேசத் திராணியற்றோராய் இருக்கின்றனர். இது கட்சி அதிகாரப்படிமுறையில் தமது ஸ்தானம் பறிபோய்விடுமென்னும் அச்சம் காரணமாக ஏற்படுவதாகும். ஆயினும் கட்சியில் அவர்களின் அங்கத்துவமும் அதன்கீழ் அவர்கள் பதவி வகிப்பதும், ஆளுங்கட்சி இலங்கை முஸ்லிம்களை எவ்வளவு மதிப்போடு நடந்துகிறதென்றும் இக்கட்சியின் அரசியல் தயாளம் எத்துணை உயர்ந்ததென்றும் வெளியுலகத்திற்குப் பறைசாற்றுவதற்கு உபயோகிக்கப்படுகின்றன.

முஸ்லிம் அல்லாத தேர்தல் தொகுதிகளில் தெரிவு செய்யப்படும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், இவர்களை வாக்காளர் தெரிவுசெய்வது, அவர்கள் முஸ்லிம்கள் என்பதற்காகவல்ல என்பதும், மாறாக அவர்களதும் முஸ்லிம்கள் அல்லாத வாக்காளர்களினதும் அரசியல் கண்ணோட்டங்கள் பூரணமாகச் சங்கமிப்பதாலேயே என்பதும் பொது அறிவுள்ள எவருக்கும் விளங்கக்கூடிய ஒரு விடயமாகும். உண்மையைக் கூறுவதாயின், முஸ்லிம் பாராளு மன்ற உறுப்பினர்கள் தமது வாக்காளர்களோடு தமது புரிந்துணர்வை வளர்த்துக்கொள்வதற்கும், வாக்காளர் மனங்க ளில் தாங்கள் நேர்மையானோர் என்னும் நல்லெண்ணத்தைத் தாபித்துக் கொள்வதற்கும் அவர்களுக்குச் சேவை செய்வதற் குத் தம்மாலியன்ற அனைத்தையும் செய்கின்றனர். முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் இப்பாராளுமன்ற உறுப்பினர் கள் அவர்களைத் திரும்பியும் பார்ப்பதில்லை. தமது பாணின் எந்தப் பக்கத்தில் பட்டர் தடவப்பட்டுள்ளது என்பதை இக்கன வான்கள் நன்கு அறிந்துவைத்துள்ளனர். ஓர் அங்கத்தவர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவராகவிருப்பினும், ஒரு முஸ்லிம் அல்லாத கட்சியின் நிரலில் அவர் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்படும்போது, அவரது கண்ணோட்டங்களுக்கும் அவரது சமூகத்தின் கண்ணோட்டங்களுக்குமிடையில் ஒற்றுமை இருப்பது இயலாத விடயமாகும். அவரின் குரல் நிச்சயமாக அவரது சமுதாயத்தின் அதிகாரக் குரலாக ஒலிக்க முடியாது. கட்சி ஒழுக்கம், ஆளுங்கட்சியின் கீழ் பதவி அதிகாரத்தை அனுபவித்தல். மற்றும் பதவியோடு சேர்ந்து வரும் சலுகைகள் என்பவை, அவர் தமது சமூகத்தின் உணர்வுகள் குறித்துப் பேசாமல் கட்சிப் போக்கை ஒட்டி நடப்பதை உறுதிசெய்கின்றன.

இதற்கு முந்திய அரசுகளின் காலத்தில் பல்வேறு இடங்களில் நூற்றுக்கணக்கான இனக்கலவரங்களின் காரணமாக முஸ்லிம் சமூகம் பல்வேறு இன்னல்களை அனுபவித்தது. அதன் உச்சக்கட்டமாக புத்தளம் பள்ளிவாசலினுள் வைத்து ஆறு முஸ்லிம்களைப் பொலிசார் சுட்டுக் கொன்றனர். பாராளு மன்ற உபசபா நாயகரும் ஒரு பிரதியமைச்சருமாக இரு

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளுங்கட்சியின் உயர்பீடத்தினால் நிலைமையை அவதானித்து அறிக்கை சமாப்பிக்கவெனச் சம்பவம் நடந்த இடத்துக்கு அனுப்பிவைக் கப்பட்னர்.பாதிப்பு நடந்த இடத்திலிருந்து திரும்பியதும்அவர்கள் குற்றவாளிகளுக்கு வெள்ளையடிக்கும் அறிக்கையொன்றையே சமர்பித்தனர்.

ஐ.தே.க. மற்றும் ஸ்ரீ.ல.சு.க.வின் முஸ்லிம் பிரதிநிதிகள் 1948ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம், 1956ஆம் ஆண்டின் மொழிச் சட்டம், 1963ஆம் ஆண்டின் நிதிச் சட்டம் என்பவற்றை நிறைவேற்றுவதில் உடந்தையாகவிருந்தனர். புதிய அரசியல மைப்புகளில், சோல்பரி அரசியலமைப்பிலிருந்த 29ம் பிரிவு மற்றும் செனட் சபை போன்றவற்றை அகற்றி, வெஸ்ட்மினிஸ்ரர் பாராளுமன்ற முறைமைக்குப் பதிலாக விகதிதாசார பிரதிநிதித் துவத்தையும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியையும் ஏற்படுத்துவதற்கும் உடந்தையாகவிருந்தனர். இந்நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கை முஸ்லிம்களை ஓர் அரசியல் மற்றும் சமூக அடிமைகளாக மாற்றியுள்ளன.

இப்பல்லின, பல ஜாதி, பல மத, பன்மொழித் தேசத்தில் தீர்மானங்களை எடுக்கும் பாராளுமன்றத்தில் தனது தேவைகள் மற்றும் அபிலாஷைளைப் பெற்றெடுக்கும் வகையில் பிரதிநிதித்துவம் செய்ய வழியின்றி முஸ்லிம்சமூகம் ஓரப்படுத் தப்பட்டுள்ளது. ஏனைய சமூகங்களைப் போலவே முஸ்லிம்க ளும் தமது மனக்குறைகளைச் சரியான மேடைகளிட் கூறவும் அவற்றுக்குப் பரிகாரம் தேடவும் விரும்புகின்றனர்.

பாராளுமன்ற ஜனநாயக மொன்றில் ஒரு சமூகம் சுதந்திமாகத் தெரிவுசெய்த தனது பிரதிநிதிகளுடாக நாட்டின் அரசாங்கத்தில் பங்குகொள்ளுகின்றது. இது ஒரு மனித உரிமையாகும். 1978 ஆம்ஆண்டின் ஜயவர்தன அரசிய லமைப்பின் காரணமாக இந்த மனித உரிமை பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்திடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளது.

# நிறைவேற்று ஜனாதிபதி பதவி

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி, நாட்டின் தலைவரும்,அரசாங்கத்தின் தலைவரும், முப்படைத் தளபதியும்ஆவார். உத்தியோகரீதியில் அல்லது தனிப்பட்ட முறையில் அவர் செய்யும் அல்லது செய்யத் தவறும் எந்த விடயம் குறித்தும் நிறைவேற்று ஜனாதிபதிக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலோ அல்லது நியாயசபையிலோ, சட்டநடவடிக்கை எதையும் எடுக்க முடியாது. சட்டம் அவரைத் தொடமுடியாதென்ற காரணத்தால், அரசுத் தலைவர் நாட்டின் சட்டத்தைச் செல்லாக் காசாக மதிக்கலாம் என்பதே இதன் பொருளாகும். நிறைவேற்று ஜனாதிபதி பதவி சகல அதிகாரங்களும் பொருந்திய ஒரு நிறுவனமாகும். ஏனைய நிறுவனங்கள் அனைத்தும் அதன்கீழேயே வருவதால், அவை முறையாகக் கருமமாற்றுவதற்கு இயலாத நிலையிலுள்ளன. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஏற்படுத்தப்பட்டபொழுது, ஜனாதிபதி வேட்பாளர் வெற்றி பெறுவதற்குச் சிறுபான்மை இனங்களின் ஆதரவு தேவைப்படுமென்றும், இதனால் அவர் சிறுபான்மையோர் உணர்வுகளுக்கும் அபிலாஷைகளுக்கும் மதிப்பளிப்பாரென்றும் எண்ணப்பட்டது. ஆயினும், தேர்தல்க்ளின் பின்னர் என்ன நடந்தது? சிறுபான்மையினங்கள் நிறைவேற்று ஜனாதிபதியின் ஆறு வருடகாலப் பதவிக்காலத்தில் அவர் மீது எவ்வித செல்வாக்கையும் செலுத்த முடியவில்லை. இதற்கு முன்னர் இருந்த தெரிவுசெய்யப்பட்ட இரு நிறைவேற்று ஜனாதிபதிகளும் இதைத்தெளிவாக நிரூபித்தனர்.

நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஒருவர் இரு தடவைகள் மாத்திரமே வகிக்கலாம். இரண்டாவது தடவையும் தேர்தலில் வெற்றி பெற்ற நபர், மூன்றாவது தடவையும் தான் ஜனாதிபதியாக முடியாதென்பதைத் தெரிந்து வைத்திருந்த காரணத்தால் சிறுபான்மையினங்களின் நலன்களை உதாசீனம் செய்தார்.

துரித பொருளாதார வளர்ச்சிக்கு நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள் அவசியமென்று சிலர் வாதிடு கின்றனர். ஆயினும் எதிர்பார்த்த முறையில் நிறைவேற்று ஜனாதிபதி பதவி செயற்படவில்லையென்பதை நாம் அறிந்துள்ளோம். கடந்த 17 வருடகால நிறைவேற்று ஜனாதி பதி பதவி ஆட்சியில் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்க ளும் குழந்தைகளும் கொல்லப்பட்டும் காயமுற்றும் உள்ளனர். அகதிகளான மக்கள் தொகை பத்து இலட்சத்தையும் தாண்டி விட்டது. ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் யுத்தத்துக்காகச் செலவிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ஜயவர்தன மற்றும் ஜனாதிபதி பிரேமதாச பதவிக் காலங்களில் நிகழ்ந்தது போன்று, நிறைவேற்று ஜனாதிபதியின் அரசியற் கட்சி அறுதிப்பெரும்பாண்மையைப் பெற்றுக்கொள்ளும்போது, நிறைவேற்று ஜனாதிபதிக்குப் பிரதமரைத் தெரிவு செய்தல், அமைச்சர்களைத் தெரிவுசெய்து விடயங்களையும் கருமங்களையும் அவர்களுக்கு ஒதுக்கிய ளித்தல், தனக்கு எந்த விடயங்களையும் கருமங்களையும் வைத்துக்கொள்ளுதல், ஒப்படைத்த விடயங்கள், கருமங்களை மாற்றுதல், அமைச்சரவைக்கு வெளியிலுள்ள புதியவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்குதல், அமைச்சர்களில் எவரையும் பதவி நீக்குதல், பொதுத்தேர்தல் முடிந்து ஒரு ஆண்டின் பின்னர் எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தைக் கலைத்தல், பொதுச் சேவை, நீதி பரிபாலனம், வெளிநாடடுத் தூதவர் சேவை மற்றும் பாதுகாப்புப் படைக்கு நியமனங்கள் செய்தல் போன்ற சகல விடயங்களிலும் பூரண அதிகாரமும் உரிமையும் உள்ளவராகின்றார். இந்த அதிகாரங்கள் இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதியை மிகக்கூடிய சக்தியுள்ள ஒரு நபராக ஆக்குகின்றன.

செலவினங்களைப் பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டுமென்ற நிபந்தனை ஜனாதிபதி நிதியமென்ற பிரத்தியேக நிதியத்துக்குக் கிடையாது. திரட்டு நிதியங்களிலிருந்து செய்யப்படும் கொடுப்பனவுகளுக்கு இருக்கும் நடவடிக்கை

முறைகளுக்கு இணங்கியொழுகவேண்டிய நிபந்தனைக ளைப்போல் எதுவும் ஜனாதிபதி நிதியக் கொடுப்பனவுகளுக்கு இல்லை. இதன் பிரகாரம் இந்த நிதியம் ஜனாதிபதியின் தற்றுணிவு மற்றும் விருப்பத்திற்கமையச் செயற்படுத்தப் படுகின்றது

ஜனாதிபதி தலைவராகவுள்ள அரசியற் கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழக்குமெனில் நிலைமை பெரிதும் மாற்றமடையும். ஜனாதிபதி பகைமையு ணர்வு கொண்ட பெரும்பான்மைக்கு முகங் கொடுக்க வேண்டியிருக்கும். அத்தோடு அரசியற் குற்றச்சாட்டு மற்றும் பதவியிழப்பு போன்ற வேறு இடர்வுகளையும் எதிர்நோக்குதல் வேண்டும்.

பொது தேர்தலில் ஜனாதிபதியின் கொள்கைக்கு எதிர்ப்பு ஏற்பட்டால் அல்லது மிகச் சிறிய பெரும்பான்மையை மாத்திரம் பெற்றுக்கொள்ள முடிந்தால், நிறைவேற்று ஜனாதிப தியின் அதிகாரங்கள் பெருமளவுக்குக் குறைக்கப்படுகின்றன.

பாரளுமன்றமே சட்டவாக்கத்தின் மூலத்தானமாகும். ஆயினும் சட்டங்களை ஆக்கும் இன்னுமோர் அமைப்பு உள் ளது. அதுவே நிறைவேற்று ஜனாதிபதி பதவியாகும். அவசரகா லநிலைப் பிரமாணங்களின் கீழும், பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழும் நிறைவேற்று ஜனாதபதீ சட்டங் களை ஆக்கியது மட்டுமன்றி, அவை சாதாரண சட்டங்களோடு முரண்படும் பட்டசத்தில் அவற்றையேமேலோங்கவும் வைத்தார். இத்தகைய அவசரகால நிலைப்பிரமாணங்களை உபயோகிக் கும் ஒரேயொரு நோக்கம் பாராளுமன்றத்தையும அங்கு சாதரணமாக இடம்பெற்றிருக்கக் கூடிய விவாதங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் வினாக்களை ஓரங்கட்டுவதாகும். ஜனாதிபதியைப் போன்று மக்கள் பிரதிநிதிகளும் மக்களால் தெரிவுசெய்யப்படுவதால், பாராளுமன்றம் சட்டநிலைத் தகவும் செயற்பாடுச் சுதந்திரமும் கொண்டதாகும். பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும். ஜனாதிபதியைப் போன்றே

மக்கள் பிரதிநிதிகளும் மக்களால் தெரிவு செய்யப்படுவதா
பாராளுமன்றமும் சுதந்திரமான செயற்பாட்டைப் பொறு
வரையில் அதேயளவு சட்டநிலைத்தகவுள்ள ஓர் அமைப்ப
விளங்கும்போது பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகா
ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருப்பது எந்த வகையி
நியாயமற்றதாகும். பாராளுமன்றத்தின் ஆயுட்கால
ஜனாதிபதியின் விருப்பில் தங்கியிருக்கும்போது ஜனாதிபதிக்கு
பாராளுமன்றத்துக்குமிடையில் சமத்துவம் நிலவமுடியாது

இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை
தனிமனிதரைச் சர்வாதிகாரி ஆக்கியுள்ளது. இதனால் பாரா
மன்றத்தில் இருக்கவேண்டிய இறைமை வேறு ஓரிடத்துக்
சென்றுள்ளது.

# அத்தியாயம் 3

## தேர்தல் முறைசார் சீர்திருத்தங்கள்

1. **அரசாங்கப் பிரேரணைகள்:**

அ. பர்ராளுமன்றத்தில் 198 அங்கத்வர் இருதத்ல் வேண்டும்.

ஆ. 99 அங்கத்தவர்கள் ஆட்புலத் தேர்தல் தொகுதிகளிலிருந்து சுதந்திரமான மக்கள் வாக்களிப்புமூலம் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

இ. 99 அங்கத்தவர்கள் மாநில விகிதாசாரப் பிரதிநித்துவமுறை மூலம் தெரிவு செய்யப்படல்வேண்டும்.

ஈ. இரு வாக்குகள் - ஒன்று ஆட்புலத் தேர்தல் தொகுதிக்கு சுதந்திரமான மக்கள் வாக்களிப்பு மூலம் அபேட்ச கரைத் தெரிவு செய்வதற்கு. மற்றது மாநில விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் கட்சியை / குழுவவைத் தெரிவு செய்வதற்கு.

உ. இடைத் தேர்தல்

2. **பொதுஜன ஐக்கிய முன்னணித் தேர்தல் விஞ்ஞாபனம்:**

அ. பாராளுமன்றத்தின் அரைவாசி அங்கத்தினர் ஆட்புலத் தேர்தல் தொகுதியிலிருந்தும், எஞ்சிய அரைவாசிப்பேர் தேசிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுதல்.

ஆ. ஜெர்மன் முறைமையில் இருப்பதுபோன்று, பாராளுமன்றத்தில் ஒரு கட்சி அல்லது குழு கொண்டிருக்கும் ஆசனங்களின் தொகை தேசிய விகிதாசாரப் பிரதிநித்துவ முறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட

வாக்குகளால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

3. பிரதான அரசியல் கட்சிகள் 1976 ஆம் ஆண்டின் எல்லை மீள்வரைவு ஆணைக்குழு ஏற்படுத்திய ஆட்புலத் தேர்தல் தொகுதிகளை மாற்றாது அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகின் றன.

4. நாடு, ஆட்புலத் தேர்தல் தொகுதகளின் எல்லை மீள்வரைவைச் செய்வதற்கான பொதுக்குடிசன மதிப்பொன்றை உடனடியாக நடந்த முடியாதுள்ளது.

5. **1976 ஆம் ஆண்டின் எல்லை மீள்ரைவு:**

அ. 1976 ஆம் ஆண்டின் எல்லை மீள்வரைவு ஆணைக் குழு 1971 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பு விபரங்களை உபயோகித்தது. ஜனத் தொகை 12,711,143 பிரஜைகள் 11,605,903 தேர்தல் தொகுதியொன்றுக்கு 90,000 மக்கள் என்னும் அடிப்படையில் 143 ஆட்புலத் தேர்தல் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. 100 சதுர மைல் நிலப்பரப்புக்கு ஒரு தேர்தல் தொகுதியெனும் அடிப்படையில் 25 மேலதிக தேர்தல் தொகுதிகள் சேர்க்கப்பட்டன. மொத்தமாக 160 ஆட்புலத் தேர்தல் தொகுதிகளிலிருந்து 168 அங்கத்தவர்கள் தெரிவுசெய் யப்பட்டனர்.

ஆ. 1,105,240 பிரஜாவுரிமையற்றோர் வாக்குரிமை இல்லாத காரணத்தால் ஜனத்தொகையில் அவர்களின் தொகைக்குரிய பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய முடியவில்லை.

இ. இது 73% மான சிங்களவர்களுக்கு உரியதல்லாத

அனுகூலமாகிய 82% வீதமான அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் வாய்ப்பை வழங்கியது. அதேவேளை யில் சிறுப்பான்மையோராகிய 12% தமிழர்கள் 11%மான அங்கத்தவர்களையும், 8% முஸ்லிம்கள் 5%மான அங்கத்தவர்களையும் 6% இந்தியத் தமிழர் 3% மான அங்கத்தவர்களையே தெரிவு செய்தனர்.

ஈ. 1979 இன் எல்லை மீள்வரைவு ஆணைக்குழு ஆட்புலத் தேர்தல் தொகுதி எல்லை மீள்வ்ரைவில் ஈடுபடுகையில் சிறுபான்மையோர் நலன்கள் விடயத் தையும் கவனத்திற்கெடுத்தல் வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. இதற்கு நேர்மாறாக, எல்லை மீள்வரைவு ஆணைக்குழு அக்ரைப்பற்று முஸ்லிம் சிறுபான்மையக் கிராமத்தில் காணப்படுவதுபோன்று மக்களின் ஒரு பகுதியனிர் பொத்துவில் தொகுதியிலும் ஏனையோர் சம்மாந்துறைத் தேர்தல் தொகுதியிலும் இடம்பெறுமாறு பிரித்து அவர்களை அரசியல் ரீதியில் பலவீனமுறச் செய்துள்ளது.

உ. ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் இயன்ற அளவுக்குச் சமமான தொகையினரான வாக் காளர்கள் இருத்தல் வேண்டுமென்ற பொதுவான விதிக்கு சிறுபான்மையோர் நலன்கள் பிரதிநிதித்துவ விடயத்தில் மட்டுமே புறநடைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும், கண்டி, தெல்தெனியா, வியாலுவ மற்றும் கொழும்பு மேற்கு போன்ற சிங்களவர் பெரும் பான்மைப் பிரதேசங்களில் சரா சரி வாக்காளர் தொகைக்கு அரைவாசிக்கும் குறைவான தொகையில் எல்லை மீள்வரவு ஆணைக்குழு தேர்தல் தொகுதிக ளை உருவாக்கியது.

## 6. 1981ஆம் ஆண்டின் எல்லை மீள்வரைவு :

அ. 1981 இல் எடுத்திருக்கவேண்டிய பொதுக் குடிசன மதிப்பு எடுக்கப்படாமலே 1981 இன் எல்லை மீள்வரைவு செய்யப்பட்டது. அது 1976 ஆம் ஆண்டின் எல்லை மீள்வரைவு தீர்மானித்த 160 ஆட்புலத் தேர்தல் தொகுதிகளை மாற்றாமல் அப்படியே தொடர்ந்தும் இருக்க அனுமதிந்தது. ஜனத் தொகைக்கோ, நிலப்பரப்பூக்கோ எவ்வித கவனமும் செலுத்தாது, ஒரு மாகாணத்துக்கு 4 ஆசனங்கள் என்ற ரீதியில் மேலும் 36 ஆசனங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. தேசிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைக்கென மேலும் 29 ஆசனங்கள் சேர்துக்கொள் ளப்பட்டன. இவ்வாறாகப் பாராளுமன்றத்தின் மொத்த அங்கத்தவர் தொகை 225 ஆகியது.

ஆ. தேர்தல் தொகுதிகள் எல்லை மீள்வரைவு மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமை குறித்து 1978 அரசியலமைப்பின் ஏற்பாடுகள் பயனளவில் பாராளுமன்றத்தில் முஸ்லிம்களால் தெரிவுசெய்யப்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகளை இல் லாமற் செய்தன.

இ. 22 தேர்தல் மாவட்டங்களில் 18 தேர்தல் மாவட்டங்களில் தமது சொந்தப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் வாய்ப்பு முஸ்லிம்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

ஈ. முஸ்லிம் சமூகத்துக்காக ஏனையோரால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு பிரதிநிதி, அவர் எவ்வளவு நல்லவராக இருந்தபோதிலும், முஸ்லிம் ஜனசமூகம் தானே தேர்ந்தெடுக்கும் ஒரு பிரதிநிதிக்குப் போதிய பதிலீடாக அமைய முடியாது.

7. <u>பிரேரணைகள்:</u>

அ. பொதுஜன ஐக்கிய முன்னணித் தேர்தல் விஞ்ஞா பனத்துக்கு மக்கள் அளித்த பணிப்பாணைக்கு உறுதியான சமர்ப்பணத்தோடு செயலாற்ற வேண்டு மென்று முஸ்லிம்கள் வலியுறுத்துகின்றனர்.

ஆ. புதிய அரசியலமைப்பின் கீழான தேர்தல் சீர்திருத் தங்கள் சகல ஜன சமூகத்தினருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குதல் வேண்டும். பாராளுமன்றம் உண்மையான தேசிய இனத்துவ விகிதா சாரத்தைப் பிரதிபலிக்க வேண்டும்.

இ. ஆகக்கூடுதலான அதிகாரப் பகிர்வு, மற்றும் ஓர் இரண்டாவது சபை என்பவற்றை வைத்து நோக் கும்போது பாராளுமன்றம் அங்கத்தவர் தொகை பெரிதாக இருக்கவேண்டிய அவசியமில்லை. தற்போது உள்ள அங்கத்தவர்கள் தொகையான 225 உம் குறைக்கப்படுதல் வேண்டும்.

ஈ. பாராளுமன்றம் இரு சபைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் ஜனப்பிரதிநிகள் சபையில் 198-204 அங்கத்தவர்களும் செனட் சபையில் 50-55 அங்கத்தவர்களும் இருக்கலாம்.

உ. 198-204 ஜனப் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்கள் அரைப்பங்கினர் ஆட்புலத் தேர்தல் தொகுதி களிலிருந்து எப்.பீ.பீ. முறை மூலமும், எஞ்சிய அரைப் பங்கினர் தேசிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் கட்சிகள்/ குழுக்களிலிருந்தும் தெரிவு செய்யப்படலாம்.

ஊ. செனட் சபைக்கான 50-55 அங்கத்தினர்கள் பொதுத் தேர்தல் ஒன்றில் தேசிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ

முறையில் ஒவ்வொரு கட்சியும்/ குழுவும் பெற்று கொண்ட வாக்குகளின் அடிப்ப டையில் நியமிக்கபட வேண்டும்.

எ. ஜனப் , பிரதிநிதிகள் சபையும், செனட் சபையு ஒரேவிதமான ஆயுட்காலங்களைக் கொண்டிருந்த வேண்டும்.

ஏ. இரண்டு வாக்குகள் - ஒன்று ஆட்புலத் தேர்த தொகுதிகளுக்கு எப்.பீ.பீ. முறை மூலம் அபே சகரைத் தெரிவு செய்வதற்கும், மற்றது தே விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் கட்சியை குழுவைத்தெரிவு செய்தற்கும்.

ஐ. பாராளுமன்றம் மக்களின் உண்மையான வாக் ளித்தற் பாங்கைப் பிரதிபலித்தல் வேண்டும். ஒ வொரு கட்சியும்/குழுவும் பாராளுமன்றத்தி கொண்டிருக்கும் மொத்த அங்கத்தவர்களை தீர்மானிக்கும் காரணி தேசிய விகிதாசாரப் பிரதி தித்துவ முறையில் பெறப்பட்ட வாக்குகளாயி ருத்தல் வேண்டும்.

ஒ (1) ஓர் அங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் 66X1= 6 அங்கத்தவர்கள், இரு அங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் 12X2 = 24அங்கத்தவர்கள், மூன்று அங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் 4X3 = அங்கத்தவர்கள். மொத்த ஆட்புலத் தேர்தல் தொகுதிகள் 82 =102 அங்கத்தவர்கள்

(11) பாராளுமன்றத்தின் 204 ஆசனங்கள் பின்வருமாறு ஒதுக்கியளிக்கப்படல் வேண்டும்.

| இனத்துவக் குழு | % | ஆசனங்கள் எப்.பீ.பீ. | ஆசனங்கள் தே.வி.பி. | மொத்தம் |
|---|---|---|---|---|
| சிங்களவர்கள் | 74 | 75 | 75 | 150 |
| தமிழர் | 12 | 13 | 13 | 26 |
| முஸ்லிம்கள் | 08 | 08 | 08 | 16 |
| இந்தியத் திமிழர்கள் | 06 | 06 | 06 | 12 |
| மொத்தம் | 100 | 102 | 102 | 204 |

ஓ. விருப்பு வாக்குள், 5% வெட்டுப்புள்ளி, மற்றும் மாவட்ட போனஸ் என்பவை ஒழிக்கப்படவேண்டும்.

ஔ. புதிய அரசியலமைப்பு செயற்டபத் தொடங்கி 3 மாதத்தினுள்ஓர் எல்லை மீள்வரைவு செய்வதற்குப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஃ. எல்லை மீள்வரைவுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு சிறுபான்மை சமூகத்தினரின் தேசிய விகிதாசார பிரதிநிதித்துவம் சாத்தியமாகும் வழியில் பொருத்தமான பிரதேசங்களில் பல அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் அதிகாரம் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

அ. தோதல் தொகுதிகளை மீள்வரைவு செய்யும்போது தேர்தல் பலம் குறைவாயிருப்பது, சிறுபான்மை யோருக்கு தேசிய இனத்துவ விகிதாசாத்தின் பிரகாரம் போதிய பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு அனுகூலமான வகையில் பாராளுமன்றத் தெரிவுக்த் செயற்பட வேண்டும்.

ஆ. மனச்சான்று வாக்களிப்பும் கட்சி தாவுதலும் தடை செய்யப்படல் வேண்டும்.

# பின்னனிணைப்பு -1

## 102 அங்கத்தினர்களைப் பகிர்ந்தளித்தல்

(அ) 25 அங்கத்தவர்கள் ஆட்புல அடிப்படையில் - அங்கத்தவருக்கு 10,000 சதுர மைல்கள்

| மாகாணம | 1993 இல் பதியப்பட்ட வாக்காளா | ஆட்புலம் குறித்த அங்கத்தினர் | வாக்காளர் குறித்த அங்கத்தினர் | திருத்தம் | மொத்த அங்கத்தி... |
|---|---|---|---|---|---|
| மேமா | 3,022,966 | 1 | 21 | -1 | 21 |
| மமா | 1,372,131 | 2 | 10 | +3 | 15 |
| தெமா | 1,462,805 | 2 | 10 | _ | 12 |
| வமா | 775,063 | 4 | 6 | -1 | 9 |
| கிமா | 757,994 | 4 | 5 | +4 | 13 |
| வமேமா | 1,256,783 | 3 | 9 | -2 | 10 |
| வமமா | 607,118 | 4 | 4 | -2 | 6 |
| ஊவா | 634,651 | 3 | 5 | -1 | 7 |
| சப் | 1,055,554 | 2 | 7 | - | 9 |
| மொத்தம் | 10,945,065 | 25 | 77 | - | 102 |

**குறிப்பு :** சிறுபான்மைப் பிரதிநிதித்துவத்தில் ஏற்படக்கூடிய பற்றாக்குறையைச் சமன்செய்யப் பிரயோகிக்கும் திருத்தம்.

# பின்னிணைப்பு 11

## 102 ஆட்புலத் தேர்தல் தொகுதிகள்

| மாகாணம் | இல. | மாவட்டம் | எப.பீ.பீ. ஆசனங்கள் | ஓர் ஆசனம் | இரண்டு ஆசனங்கள் | 1ன்று ஆசனங்கள் | சிங்களவர் ஆசனங்கள் | தமிழர் ஆசனங்கள் | இந். தமிழர் ஆசனங்கள் | முஸ்லிம் ஆசனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மே.மா. | 21 | கொழும்பு | 11 | 8 | - | 1 | 10 | - | 1 | - |
| | | கம்பஹா | 6 | 6 | - | - | 6 | - | - | - |
| | | களுத்துறை | 4 | 2 | 1 | - | 4 | - | - | - |
| ம.மா. | 15 | கண்டி | 7 | 5 | 1 | - | 7 | - | - | - |
| | | மாத்தளை | 2 | 2 | - | - | 2 | - | - | - |
| | | நுவரெலரியா | 6 | - | - | 2 | 3 | - | - | 3 |
| தெ.மா. | 12 | காலி | 5 | 5 | - | - | 5 | - | - | - |
| | | மாத்தறை | 4 | 2 | 1 | - | 4 | - | - | - |
| | | ஹம்பாந்தோட்டை | 3 | 1 | 1 | - | 3 | - | - | - |
| வ.மா. | 9 | யாழ்ப்பாணம் | 5 | 3 | 1 | - | - | 5 | - | - |
| | | மன்னார் | 2 | - | 1 | - | - | 1 | 1 | - |
| | | வவுனியா | 1 | 1 | - | - | - | 1 | - | - |
| | | முல்லைத்தீவு | 1 | 1 | - | - | - | 1 | - | - |
| கி.மா. | 13 | மட்டக்களப்பு | 4 | 1 | - | 1 | - | 3 | 1 | - |
| | | அம்பாறை | 6 | 4 | 1 | - | 2 | 1 | 3 | - |
| | | திருகோணமலை | 3 | 3 | - | - | 1 | 1 | 1 | - |
| வ.மே.மா. | 10 | குருநாகல் | 6 | 6 | - | - | 6 | - | - | - |
| | | புத்தளம் | 4 | 2 | 1 | - | 3 | - | 1 | - |
| வ.ம.மா. | 6 | அனுராதபுரம் | 4 | 4 | - | - | 4 | - | - | - |
| | | பொலன்னறுவை | 2 | 2 | - | - | 2 | - | - | - |
| ஊவா. | 7 | பதுளை | 5 | 1 | 2 | - | 3 | - | - | 2 |
| | | மொணராகலை | 2 | 2 | - | - | 2 | - | - | - |
| சப். | 9 | இரத்தினபுரி | 5 | 5 | - | - | 5 | - | - | - |
| | | கேகாலை | 4 | 2 | 1 | - | 3 | - | - | 1 |
| மொத்தம் | 102 | | 102 | 68 | 12 | 4 | 75 | 13 | 8 | 6 |

**குறிப்பு** : பாராளுமன்றத்திலிருந்தும் ஆட்புலத் தொகுதிகளிலிருந்தும் 99 பிரதிநிதிகளுக்கு குறையாமலும் 105 பிரதிநிதிகளுக்கு கூடாமலும் தெரிவு செய்யப்படல்வேண்டும்.

# சிறுபான்மையோர் தேர்தல் தொகுதிகள்

## 1993 ஆம் ஆண்டு பதியப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையின் இனவிகிதாசாரம்

| இல. | தேர்தல் தொகுதி | வாக் காளர் | % | சிங்க ளவர் | % | தமிழர் | % | முஸ்லிம் | % | இந். தமிழர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு வடக்கு | 63,528 | 52.5 | 33,352 | 23.8 | 15,120 | 12.6 | 8,005 | 6.9 | 4,383 |
| 2 | கொழும்பு மத்தி | 135,012 | 36.4 | 50,600 | 15.7 | 21,825 | 39.6 | 55,049 | 1.9 | 2,641 |
| 3 | பொரளை | 52,002 | 70.0 | 36,401 | 8.3 | 4,368 | 10.9 | 5,668 | 2.5 | 1,300 |
| 33 | மத்துகம | 80,135 | 82.4 | 66,031 | 2.1 | 1,683 | 1.8 | 1,442 | 13.5 | 10,818 |
| 35 | பேருவளை | 83,849 | 72.7 | 60,991 | 0.6 | 503 | 26.2 | 21,980 | 0.4 | 336 |
| 35 | ஹாரிஸ் பத்து | 109,246 | 74.1 | 80,951 | 0.7 | 765 | 19.3 | 21,.84 | 5.6 | 6,118 |
| 65 | காலி | 62,011 | 75.2 | 46,632 | 1.1 | 682 | 22.7 | 14,076 | 0.4 | 248 |
| 90 | மன்னார் | 54,066 | 4.3 | 2,325 | 49.8 | 26,925 | 29.8 | 16,112 | 16.1 | 8,705 |
| 95 | மூதூர் | 61,649 | 3.9 | 2,416 | 29.2 | 18,089 | 66.1 | 40,948 | 1.8 | 1,115 |
| 96 | கல்குடா | 73,640 | 3.7 | 2,725 | 64.9 | 47,792 | 29.3 | 21,557 | 2.2 | 1,620 |
| 97 | மட்டக்களப்பு | 123,893 | 3.9 | 4,832 | 56.9 | 70,495 | 31.2 | 42,371 | 3.5 | 4,336 |

தொடர்ச்சி 51ம் பக்கம்

50 ம் பக்கத் தொடர்

| இல. | தேர்தல் தொகுதி | வாக் காளர் | % | சிங்க ளவர் | % | தமிழர் | % | முஸ்லிம் | % | இந். தமிழர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 101 | கல்முனை | 50,248 | 1.2 | 603 | 28.1 | 14,120 | 69.6 | 34,973 | 0.8 | 402 |
| 100 | சம்மாந்துறை | 51,991 | 2.2 | 1,144 | 21.7 | 11,282 | 74.8 | 38,899 | 1.0 | 520 |
| 102 | பொத்துவில் | 97,721 | 15.0 | 14,658 | 32.6 | 31,857 | 50.6 | 49,446 | 1.7 | 1,661 |
| 103 | புத்தளம் | 73,757 | 37.9 | 27,924 | 19.9 | 14,677 | 39.5 | 29,134 | 1.9 | 1,401 |
| 54 | நுவரெலியா-மஸ் | 212,690 | 19,7 | 41,900 | 7.0 | 14,888 | 2.4 | 5,105 | 70.4 | 149,733 |
| 55 | கொத்மலை | 156,977 | 41.0 | 23,361 | 3.3 | 1,880 | 2.9 | 1,652 | 53.3 | 30,369 |
| 56 | ஹங்குரன்கெத்த | 54,001 | 72,23 | 39,005 | 1.9 | 1,026 | 0.4 | 216 | 25.3 | 13,662 |
| 57 | வலப்பனை | 63,000 | 57,1 | 35,973 | 3.3 | 2,079 | 0.9 | 567 | 38.0 | 23,940 |
| 134 | பசறை | 45,788 | 40.1 | 18,361 | 4.3 | 1,969 | 2.6 | 1,190 | 52.1 | 23,856 |
| 135 | பதுளை | 40,039 | 59.7 | 23,903 | 8.0 | 3,203 | 7,7 | 3,083 | 22.7 | 9,089 |
| 136 | ஹாலி-எல | 48,807 | 46.8 | 22,842 | 3.1 | 1,513 | 2.1 | 1,025 | 47.6 | 23,232 |
| 39 | மாத்தளை | 58,638 | 67.1 | 39,346 | 2.6 | 4,457 | 11.8 | 6,919 | 12.8 | 7,506 |
| 40 | ரத்தோட்டை | 66,238 | 61.1 | 40,471 | 3.4 | 2,252 | 7.3 | 4,835 | 27.9 | 18,480 |
| 150 | யட்டியாந்தோட்டை | 57,328 | 70.6 | 40,474 | 5.0 | 2,866 | 1.8 | 1,032 | 22.4 | 12,841 |
| 152 | தெரணியகலை | 52,714 | 70.1 | 39,953 | 3.8 | 2,003 | 0.7 | 369 | 25.2 | 13,284 |
| 139 | பண்டாரவளை | 56,426 | 56.2 | 31,711 | 4.2 | 2,370 | 3.2 | 1,806 | 36.0 | 20,313 |
| 140 | ஹப்புத்தளை | 48,853 | 39.7 | 19,395 | 4.1 | 2,003 | 3.1 | 1,514 | 52.7 | 25,746 |

| மாகாணம் | மாவட்டம் | மொ. ச.தொ. 1981 | முஸ்லிம் ச.தொ. 1981 | % | பரப்பு சதுர கி.மீ | ஜ.வ். பிரிவு | உ.அ.அ். பிரிவு | பிரதேச செ. பிரிவு | பாராளு. அங்கத்துவர் | மாகாண. அங்கத்துவர் | உள்ளூர் பிரிவு: மா. ந. சபை | உள்ளூர் பிரிவு: நகர சபை | உள்ளூர் பிரிவு: பிரதேச சபை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மே. மா. | | 3,910,001 | 279,587 | 7 | 3,709 | 17 | 32 | 33 | 50 | 102 | 3 | 14 | 27 |
| | கொழும்பு | 1,693,322 | 168,656 | 10 | 2,093 | 11 | 9 | 10 | 21 | 43 | 2 | 4 | 6 |
| | கம்பஹா | 1,389,490 | 47,850 | 3 | - | - | 13 | 13 | 18 | 36 | 1 | 6 | 11 |
| | களுத்துறை | 827,189 | 62,781 | 8 | 1,616 | 6 | 10 | 10 | 11 | 24 | 10 | 4 | 10 |
| ம. மா. | | 2,005,956 | 168,040 | 8 | 5,015 | 20 | 33 | 31 | 23 | 56 | 3 | 6 | 33 |
| | கண்டி | 1,126,296 | 125,646 | 11 | 2,367 | 11 | 17 | 16 | 12 | 28 | 1 | 4 | 17 |
| | மாத்தளை | 357,441 | 26,603 | 7 | 1,994 | 5 | 11 | 10 | 5 | 11 | 1 | - | 11 |
| | நுவரெலிய | 522,219 | 15,791 | 3 | 1,228 | 4 | 5 | 5 | 6 | 17 | 1 | 2 | 5 |
| தெ. மா. | | 1,882,912 | 52,545 | 3 | 5,556 | 17 | 36 | 38 | 27 | 53 | 1 | 5 | 36 |
| | காலி | 814,579 | 26,359 | 3 | 1,689 | 7 | 16 | 17 | 11 | 22 | 1 | 1 | 15 |
| | மாத்தறை | 644,231 | 16,853 | 3 | 1,246 | 6 | 12 | 12 | 9 | 17 | - | 2 | 12 |
| | அம்பாந்தோட்டை | 424,102 | 9,333 | 2 | 2,621 | 4 | 8 | 9 | 7 | 14 | - | 2 | 9 |
| வட. மா. | | 1,111,468 | 62,609 | 6 | 8,879 | 20 | 28 | 31 | 16 | 36 | 1 | 4 | 27 |
| | யாழ்ப்பாணம் | 831,112 | 14,169 | 2 | 2,584 | 12 | 13 | 15 | 11 | 19 | 1 | 3 | 12 |
| | கிளிநொச்சி | - | - | - | - | - | 3 | 3 | 1 | 3 | - | - | 3 |
| | மன்னார் | 106,940 | 30,079 | 28 | 2,497 | 3 | 4 | 4 | 1 | 5 | - | - | 4 |
| | வவுனியா | 95,904 | 6,764 | 7 | 3,797 | 5 | 4 | 5 | 2 | 4 | - | 1 | 4 |
| | முல்லைத்தீவு | 77,512 | 11,597 | 15 | - | - | 4 | 4 | 1 | 5 | - | - | 4 |

தொடர்ச்சி 53ம் பக்கம்

51ம் பக்கத் தொடர்

| மாகாணம் | மாவட்டம் | மொ. ச.தொ. 1981 | முஸ்லிம் ச.தொ. 1981 | % | பரப்பு சதுர கி.மீ | ஞ். வ் பிரிவு | உ.அ.த். பிரிவு | பிரதேச செ. பிரிவு | பாராளு. அங்கத்துவர் | மாகாண. அங்கத்துவர் | உள்ளூர் பிரிவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | மா. ந. சபை | நகர சபை | பிரதேச சபை |
| கி. மா. | | 975,975 | 317,177 | 33 | 9,943 | 17 | 30 | 36 | 14 | 35 | 1 | 2 | 36 |
| | மட்டக்களப்பு | 330,899 | 79,662 | 24 | 2,631 | 5 | 8 | 11 | 4 | 11 | 1 | | 11 |
| | திருகோணமலை | 259,790 | 75,761 | 30 | 2,714 | 6 | 10 | 10 | 4 | 10 | | 1 | 15 |
| | அம்பாரை | 388,786 | 161,754 | 42 | 4,597 | 6 | 12 | 15 | 6 | 14 | | 1 | 10 |
| வமே. மா. | | 1,706,099 | 114,459 | 7 | 7,811 | 16 | 28 | 25 | 23 | 50 | 1 | 3 | 27 |
| | குருனாகல் | 1,221,755 | 64,213 | 5 | 4,776 | 10 | 18 | 16 | 16 | 35 | 1 | 1 | 17 |
| | புத்தளம் | 493,344 | 50,246 | 10 | 3,035 | 6 | 10 | 9 | 7 | 15 | | 2 | 10 |
| வ.ம. மா. | | 850,582 | 61,422 | 7 | 10,720 | 11 | 24 | 24 | 11 | 31 | | 1 | 24 |
| | அனுராதபுரம் | 587,829 | 43,801 | 7 | 7,273 | 9 | 19 | 18 | 7 | 21 | | 1 | 18 |
| | பொலன்னறுவ | 262,753 | 17,621 | 7 | 3,447 | 2 | 5 | 6 | 4 | 10 | | | 6 |
| ஊ. மா. | | 922,636 | 34,509 | 4 | 8,487 | 9 | 23 | 25 | 12 | 32 | 1 | 2 | 24 |
| | பதுளை | 642,893 | 28,759 | 4 | 2,823 | 5 | 14 | 14 | 8 | 19 | 1 | 2 | 14 |
| | மொனறாகலை | 279,743 | 5,750 | 2 | 5,664 | 4 | 9 | 11 | 4 | 13 | | | 10 |
| ச. மா. | | 1,478,879 | 51,989 | 4 | 4,900 | 11 | 22 | 23 | 20 | 42 | 1 | 2 | 23 |
| | இரத்தினபுரி | 796,468 | 15,441 | 2 | 3,237 | 6 | 12 | 13 | 10 | 23 | 1 | 1 | 13 |
| | கேகாலை | 682,411 | 36,548 | 5 | 1,663 | 5 | 10 | 10 | 10 | 19 | | 1 | 10 |
| | மொத்தம் | 14,050,001 | 1,134,556 | 8 | 65,620 | 138 | 256 | 266 | 196 | 437 | 12 | 39 | 257 |

| மாகணம் | மாவட்டம் | பரப்பு சதுர கி.மீ. | சனத்தொகை 1969 உத்தேச விபரம் | | | பிரதேச சபை அங்கத்துவம் | | | முஸ்லிம் பிரதேச சபை அங்கத்துவம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | முஸ்லிம் | 1 | சனத் தொ. | நிலப் பரப்பு | மொ. | சனத் தொ | நிலப் பரப்பு | மொ. |
| மே. மா. | | 3,709 | 5,200,301 | 371,851 | 7 | 130 | 4 | 134 | 9 | - | 9 |
| | கொழும்பு | 2,093 | 2,252,118 | 224,712 | 10 | 56 | 1 | 57 | 6 | - | 6 |
| | கம்பஹா | | 1,884,022 | 63,641 | 3 | 46 | 1 | 47 | 1 | - | 1 |
| | களுத்துறை | 1,616 | 1,100,161 | 83,499 | 8 | 28 | 1 | 30 | 2 | - | 2 |
| ம. மா. | | 5,015 | 2,667,921 | 223,493 | 8 | 66 | 2 | 71 | 6 | - | 6 |
| | கண்டி | 2,367 | 1,497,974 | 167,109 | 11 | 37 | 5 | 39 | 4 | - | 4 |
| | மாத்தளை | 1,994 | 475,397 | 35,382 | 7 | 12 | 2 | 14 | 1 | - | 1 |
| | நுவரெலிய | 1,228 | 694,551 | 21,002 | 3 | 17 | 2 | 18 | 1 | - | 1 |
| தெ. மா. | | 5,556 | 2,504,273 | 69,885 | 3 | 62 | 6 | 68 | 2 | - | 2 |
| | காலி | 1,689 | 1,083,390 | 35,057 | 3 | 27 | 2 | 29 | 1 | - | 1 |
| | மாத்தறை | 1,246 | 856,827 | 22,414 | 3 | 21 | 1 | 22 | 1 | - | 1 |
| | ஹம்மாந்தோட்டை | 2,621 | 564,056 | 12,413 | 2 | 14 | 3 | 17 | - | - | - |
| வ. மா. | | 8,876 | 1,478,252 | 83,270 | 6 | 38 | 9 | 47 | 1 | 1 | 2 |
| | யாழ்ப்பாணம் | 2,584 | 1,105,378 | 18,845 | 2 | 28 | 2 | 30 | - | - | - |
| | கிளிநொச்சி | - | - | - | - | - | - | - | - | - | - |
| | மன்னார் | 2,497 | 142,230 | 40,005 | 28 | 4 | 3 | 7 | 1 | 1 | 2 |
| | வவுனியா | 3,797 | 127,552 | 8,996 | 7 | 3 | 2 | 5 | - | - | - |
| | முல்லைத்தீவு | - | 103,091 | 15,424 | 15 | 3 | 2 | 5 | - | - | - |

தொடர்ச்சி 55ம் பக்கம்

54ம் பக்கத் தொடர்

| மாகணம் | மாவட்டம் | பரப்பு சதுர கி.மீ. | சனத்தொகை 1969 உத்தேச விபரம் | | | பிரதேச சபை அங்கத்துவம் | | | முஸ்லிம் பிரதேச சபை அங்கத்துவம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மொர்தம் | முஸ்லிம் | 1 | சனத் தொ. | நிலப் பரப்பு | மொ. | சனத் தொ | நிலப் பரப்பு | மொ. |
| கி. மா. | | 9,943 | 1,298,047 | 421,845 | 33 | 33 | 11 | 44 | 11 | 4 | 15 |
| | மட்டக்களப்பு | 2,631 | 440,96 | 105,950 | 24 | 11 | 3 | 14 | 3 | 1 | 4 |
| | திருகோணமலை | 2,714 | 341,531 | 100,762 | 30 | 9 | 3 | 12 | 3 | 1 | 4 |
| | அம்பாரை | 4,597 | 517,085 | 215,133 | 42 | 13 | 5 | 18 | 5 | 2 | 7 |
| வமே. மா. | | 7,811 | 2,269,112 | 152,230 | 7 | 56 | 8 | 64 | 4 | 1 | 5 |
| | குருனாகல | 4,776 | 1,612,964 | 85,403 | 5 | 40 | 5 | 45 | 2 | - | 2 |
| | புத்தளம் | 3,035 | 656,148 | 66,827 | 10 | 16 | 3 | 19 | 2 | 1 | 3 |
| வ.ம. மா. | | 10,720 | 1,131,274 | 81,691 | 7 | 29 | 11 | 40 | 2 | 1 | 3 |
| | அனுராதபுரம் | 7,273 | 781,813 | 58,255 | 7 | 20 | 7 | 27 | 1 | 1 | 2 |
| | பொலனறுவை | 3,447 | 349,461 | 23,436 | 7 | 9 | 4 | 13 | 1 | - | 1 |
| ஊ. மா. | | 8,487 | 1,227,106 | 45,897 | 4 | 30 | 9 | 39 | 1 | - | - |
| | பதுளை | 2,823 | 855,048 | 38,249 | 4 | 21 | 3 | 24 | 1 | - | 1 |
| | மொனராகல | 5,664 | 372,058 | 7,648 | 2 | 9 | 6 | 15 | - | - | - |
| ச. மா. | | 4,900 | 1,966,909 | 69,145 | 4 | 49 | 5 | 54 | 2 | - | 2 |
| | இரத்தினபுரி | 3,237 | 1,059,302 | 20,536 | 2 | 26 | 3 | 29 | 1 | - | 1 |
| | காலி | 1,663 | 907,607 | 48,609 | 5 | 23 | 2 | 25 | 1 | - | 1 |
| | மொத்தம் | 65,620 | 18,686,501 | 1,508,959 | 8 | 493 | 68 | 561 | 38 | 7 | 45 |

# ஸ்ரீ லங்கா தேர்தல் தொகுதி

**கொழும்பு மாவட்டம்**
1. கொழும்பு மேற்க்கு
2. மத்திய கொழும்பு(3)
3. பொரல்ல
4. கொழும்பு கிழக்கு
5. கொழும்பு மேற்கு.
6. தெஹிவலை
7. இரத்மலானை
8. வத்தளை
9. நீர்கொழும்பு
10. கட்டான
11. திவுலபிட்டிய
12. மீரிகம
13. மினுவாங்கொட
14. அத்தனகல
15. கம்பஹா
16. ஜா-எல
17. மஹர
18. தொமபே
19. பியகம
20. களனி
21. கொலன்னாவ
22. கோட்டே
23. கடுவெல
24. அவிசாவெல
25. ஹோமாகம
26. கெஸ்பாவ
28. மொறட்டுவ

**களுத்துறை மாவட்டம்**
29. பாணந்துற
30. ஹொரண
31. பண்டாரகம
32. புளத்சிங்கள
33. மத்துகம
34. களுத்துற
35. பேருவலை(2)
36. அகலவத்தை

**மாத்தளை மாவட்டம்**
37. தம்புள்ள
38. லக்கல
39. மாத்தளை
40. றத்தோட்ட

**கண்டி மாவட்டம்**
41. கலகெதர
42. ஹரிஸ்பத்துவ(2)
43. பத தும்புர
44. உடதும்புர
45. தெல்தனிய
46. குண்டசால்
47. ஹேவஹெட்ட
48. செங்கடகல
49. மஹநுவர
50. யட்டிநுவர
51. உடுநுவர
52. கம்பொல
53. நாவல பிட்டிய

**நுவரெலிய மாவட்டம்**
54. நுவரெலிய-மஸ்கெலிய(3)
55. கொத்மல
56. அங்குராங்கெட்ட
57. வளப்பண

**காலி மாவட்டம்**
58. பாலபிட்டிய
59. அம்பலாங்கொடை
60. கரந்தனிய
61. பன்டார-எல்பிட்டிய
62. ஹினிதும
63. பெத்தகம
64. ரட்கம
65. காலி
66. அக்மீமன
67. ஹபாரதுவ

**மாத்தறை மாவட்டம்**
68. தெனியாய
69. ஹக்மன
70. அக்குரஸ்ச
71. கம்புருபிட்டிய
72. தெவிநுவர
73. மாத்தறை
74. வெலிகம

**ஹம்பாந்தொட்டை மாவட்டம்**
75. முல்கிரிகல
76. பெலியெத்த
77. தங்கால
78. திஸ்ஸமஹாரம



**யாழ்பாண மாவட்டம்**
79. கயிட்ஸ்
80. வடுகோட்டை
81. காங்கேசன்துறை
82. மானிபாய்
83. கோபாய்
84. உடுபிட்டி
85. பொயின் பிதுரோ
86. சாவக்கச்சேரி
87. நல்லூர்
88. யாழ்பாணம்
89. கிளிநொச்சி

**மன்னார் மாவட்டம்**
90. மன்னார்

**வவுனியா மாவட்டம்**
91. முல்லைத்தீவு
92. வவுனியா

**திருகோணமலை மாவட்டம்**
93. சேருவில
94. திருகோனமலை
95. மூதூர்.

**மட்டக்களப்பு மாவட்டம்**
96. கல்குடா
97. மட்டக்களப்பு(2)
98. பட்டிருப்பு

**அம்பார மாவட்டம்.**
99. அம்பார
100. சம்மாந்துறை
101. கல்முனை
102. பொத்துவில் (2)

**புத்தளம் மாவட்டம்**
103. புத்தளம்
104. ஆனைமடுவ
105. சிலாபம்
106. நாத்தான்டியா
107. வென்னப்புவ

**குருனாகல் மாவட்டம்**
108. கல்கமுவ
109. நிக்கவிரட்டிய
110. யாப்பகுவ
111. ஹிரியல
112. வாரியாபொல
113. பண்டுவாஸ்நுவர
114. பிங்கிரிய
115. கட்டுகம்பொல
116. குலியாப்பிட்டிய
117. தம்பதெனிய
118. பொல்காவெல
119. குருனாகல
120. மாவத்தகம
121. தொடங்கஸ்லந்த

**அனுராதப்புர மாவட்டம்.**
122. மதவாச்சிய
123. ஹொரவுபொத்தான
124. அனுராபுர கிழக்கு
125. அனுராதபுரமேற்கு
126. கலாவெவ
127. மிஹிந்தல
128. கெக்கிராவ

**பொல்காவல மாவட்டம்.**
129. மின்நேரியா
130. மிதுருகிரிய
131. பொலநறுவ

**பதுளை மாவட்டம்**
132. மையாங்கன
133. வியளுவ
134. பஸ்சற
135. பதுளை
136. ஹாலியெல
137. ஊவா-பரணகம
138. வெலிமட
139. பண்டாரவள
140. அப்புத்தள.

**மொன ராகலை மாவட்டம்**
141. பிபில
142. மொனராகலை
143. வெல்லவாய

**கேகால மாவட்டம்.**
144. டெடிகம
145. களிகமுவ
146. ரம்புக்கன
148. மாவநல்ல
149. ஹரநாயக்க
150. யட்டியான்தொட்ட
151. ருவான்வள
152. திரினியாகள

**இரத்னபுர மாவட்டம்**
153. எஹலியாகொட
154. இரத்னபுர
155. பெல்மடுல்ல
156. பலாங்கொட
157. ரக்வான.
158. நிவிட்டிகல
159. கலாவான
160. கொலொன்னா

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் குடிசனத்தொகுதி



**கொழும்பு மாவட்டம்**
1. கொழும்பு மேற்க்கு
2. மத்திய கொழும்பு(3)
3. பொரல்ல
4. கொழும்பு கிழக்கு
5. கொழும்பு மேற்கு
6. தெஹிவலை
7. இரத்மலானை
8. வத்தளை
9. நீர்கொழும்பு
10. கட்டான
11. திவுல்பிட்டிய
12. மீரிகம
13. மினுவாங்கொட
14. அத்தனகல
15. கம்பஹா
16. ஜா-எல
17. மஹர
18. தொமபே
19. பியகம
20. களனி
21. கொலன்னாவ
22. கோட்டே
23. கடுவெல
24. அவிசாவெல
25. ஹோமாகம
26. கெஸ்பாவ
28. மொறட்டுவ

**களுத்துறை மாவட்டம்**
29. பாணந்துற
30. ஹொரண
31. பண்டாரகம
32. புளத்சிங்கள
33. மத்துகம
34. களுத்துற
35. பேருவலை(2)
36. அகலவத்தை

**மாத்தளை மாவட்டம்**
37. தம்புள்ள
38. லக்கல
39. மாத்தளை
40. றத்தோட்ட

**கண்டி மாவட்டம்**
41. கலகெதர
42. ஹரிஸ்பத்துவ(2)
43. பத தும்புர
